# ஐ.நாவின் இரு உப அமைப்புக்களில் இருந்து அமெரிக்கா நீக்கப்பட்டது

— சுட்டி

ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழு ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து தொடர்ந்து ஐம்பத்தேழு கூட்டத் தொடர்களில் அங்கத்துவம் வகித்து வந்த அமெரிக்கா, சென்றவாரம் தனது அங்கத்துவத்தை இழந்துள்ளது. இது மனித உரிமை விடயங்களில் மிகவும் அக்கறையுள்ளதாகக் காட்டிக்கொள்ளும் ஐக்கிய அமெரிக்காவிற்கு பலத்த அடியாகும்.

ஐ.நாவை பொறுத்தவரை பாதுகாப்புச் சபையில் அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ், ரஷ்யா மற்றும் சீனா ஆகிய ஐந்து நாடுகள் நிரந்தர அங்கத்துவத்தைக் கொண்டுள்ளன. ஐ.நா.வின் பெரும்பாலான உப குழுக்களிலும், உப அமைப்புக்களிலும் இந் நாடுகள் அங்கத்துவம் வகிக்கின்றன.

இதில் விசேடமாக மனித உரிமை ஆணைக்குழு முக்கியமானது. காரணம் உலகின் பல பாகங்களிலும் நடைபெறும் மனித உரிமை மீறல்களை இவ் ஆணைக்குழுவிலேயே எடுத்து ஆராய்ந்து, அதற்கான வழிமுறைகளைக் காண்பார்கள்.

இந்தவகையில், 'உலகின் பொலிஸ்காரர்' என்று வர்ணிக்கப்படும் அமெரிக்கா, ஐ.நா. மனித உரிமைக் குழுவில் பெரும் செல்வாக்குப் பெற்ற அங்கத்தவராகத் திகழ்ந்தது மட்டுமல்லாது, தனது கொள்கைக்கு ஒத்துவராத நாடுகள் மீது இவ் ஆணைக்குழுவின் கண்டனங்களுக்கு உள்ளாக்கியதும் இங்கு குறிப்பிடத்தக்கது. உதாரணமாக கியூபா, ஈராக், ஈரான், சீனா போன்ற நாடுகள் மீது இவ் ஆணைக்குழுவினால் பலவிதப்பட்ட எச்சரிக்கைகள் விடப்பட்டன.

ஐ.நா. மனித உரிமை ஆணைக் குழுவைப் பொறுத்தவரையில் அமெரிக்காவினுடைய செயற்பாடுகள் சில வேளைகளில் வேடிக்கையானவை. சில நாடுகள் மீதான புகாரை தன்னால் முன்வைக்க முடியாத நிலையில், தன்னுடன் அணிசேர்ந்துள்ள சிறு நாடுகளைப் பாவித்து தனக்கு எதிரான நாட்டைக் கண்டிப்பது வழக்கமாகி வந்துள்ளது. கடந்த 57வது ஆணைக்குழுவில் செக்குடியரசு நாட்டினைப் பாவித்து கியூபா நாடு மீதான கண்டனத்தை அமெரிக்கா ஒழுங்கு செய்திருந்தது.

இப்படியாக, ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவை தனது தேவைகளுக்கு ஏற்ப பாவித்துவந்த அமெரிக்கா, கடந்த மே 3ஆம் திகதி அன்று ஐ.நா.வின் சமூகப் பொருளாதாரச் சபை (Economic Social Council) யினால் நடத்தப்பட்ட மனித உரிமை ஆணைக் குழுவுக்கான அங்கத்தவர் தேர்தலில் தோல்விகண்டு தனது நீண்டகால அங்கத்துவத்தை இழந்துள்ளது.

கடந்த மே 3ஆம் திகதி எப்படியாக அமெரிக்கா தனது அங்கத்துவத்தை இழந்ததோ, அதேபோல் கடந்த ஆண்டு நடைபெற்ற தேர்தலில் சிறீலங்கா தனது அங்கத்துவத்தை இவ் ஆணைக் குழுவில் இழந்தது.

இலங்கைத்தீவில் தமிழ் மக்கள் மீதான கடுமையான மனித உரிமை மீறல்களை மேற்கொண்ட சிறீலங்கா அரசு, அரசசார்பற்ற நிறுவனங்களின் தொடர்ச்சியான பிரச்சாரத்தினால் தோல்வி கண்டது.

ஐ.நா. மனித உரிமை ஆணைக் குழு 1947ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இவ் ஆணைக்குழு ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து 1950ஆம் ஆண்டுவரை அன்றைய அமெரிக்க ஜனாதிபதி பிராங்ளின் ரூஸ்வேல்ட்டின் மனைவி திருமதி. ரூஸ்வேல்ட் இவ் ஆணைக்குழுவின் தலைவியாக தொடர்ந்து நான்கு வருடங்களாக கடமையாற்றினார். திருமதி. ரூஸ்வேல்ட்டின் பின்னர் எந்த அமெரிக்கரும் இவ் ஆணைக் குழுவுக்கு தலைமைத்துவம் வகிக்கவில்லை.

இவ் ஆணைக்குழுவில் ஐம்பத்து மூன்று நாடுகள் மட்டுமே அங்கத்துவம் வகிக்கின்றன. ஐ.நா.வில் அங்கத்துவம்கொண்ட மிகுதி நூற்று முப்பத்து மூன்று நாடுகளும் பார்வையாளர் என்ற அந்தஸ்தை இவ் ஆணைக்குழுவில் கொண்டுள்ளார்கள். அங்கத்துவ நாடுகள் இவ் ஆணைக்குழுவில் வாக்குரிமையைக் கொண்டது மட்டுமல்லாது, சில விசேட சலுகைகளையும் கொண்டுள்ளன.

அங்கத்துவ நாடுகள் கூடிய நேரம் உரையாற்றுவதுடன், அரசசார்பற்ற நிறுவனங்கள் இந்நாடுகளைக் கண்டிக்கும்போது உடனுக்கு உடன் பதிலளிக்கவும் உரிமை கொண்டுள்ளனர்.

அமெரிக்கா, சிறீலங்கா போன்ற அங்கத்துவம் இழந்த நாடுகளின் நிலை இவ் ஆணைக்குழுவில் அரசசார்பற்ற நிறுவனங்களைவிட ஒருபடி கூடவாகவே இருக்கும். இந்நிலை ஓர் நாட்டிற்கு விசேடமாக மனித உரிமை மீறல்கள் நிரம்பிய நாடுகளுக்கு நிச்சயம் வெட்கத்தையும், தலைகுனிவையும் ஐக்கிய நாடுகள் சபையில் ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

இவ் ஆணைக்குழு தொடங்கிய 1947ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை தொடர்ந்து அங்கத்துவம் வகிக்கும் இரு நாடுகளாக ரஷ்யாவும், இந்தியாவும் திகழ்கின்றன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இதனிடையே ஐக்கிய அமெரிக்கா தனது அங்கத்துவம் ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இருந்து நீக்கப்பட்டதை அடுத்து கொதித்துப் போயுள்ளது. இதன் விளைவாக அமெரிக்கா ஐ.நாவிற்குக் கொடுக்க வேண்டிய 224மில்லியன் டொலர்களை கொடுக்க மறுத்துள்ளதோடு, மீள தமது அங்கத்துவம் ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நிலை நிறுத்தப்பட்டால் இந்நிதி வழங்கப்படும் என்றும் தெரிவித்துள்ளது. இதற்கு அமெரிக்க பிரதிநிதிகள் சபையும் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தமது அங்கத்துவம் இழக்கப்பட்டதையிட்டு மிகவும் அதிர்ச்சியடைந்துள்ள அமெரிக்க அரசாங்கம், மிகமோசமான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் உள்ள நாடுகளான லிபியா, சூடான் முதலானவற்றிற்கு அங்கத்துவம் வழங்கப்பட்டதையிட்டு கடும் விசனத்தைத் தெரிவித்துள்ளது. மேலும் ஐ.நா போதைப்பொருள் கண்காணிப்பு மற்றும் விவகாரங்களுக்கான குழுவிலிருந்தும் அமெரிக்கா நீக்கப்பட்டுள்ளது. ■

# புலிகளின் சமாதானச் செயற்பாடுகள் அரசின் போர் நடவடிக்கைகள் பேச்சுவார்த்தைக்கு வாய்ப்புகள் உண்டா?

இனப்போர் காரணமாக இலங்கைத்தீவை உருக்குலைத்துவரும் இரத்தக்களரியை நிறுத்துவதற்காக, போரிடும் இருதரப்பும் யுத்தத்தை நிறுத்தி, அமைதிச்சூழலை உருவாக்கி, பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண முயலவேண்டும் என்று சர்வதேச சமூகம் விடாது வலியுறுத்திவருகின்றது.

சர்வதேசத்தின் குரலுக்கு மதிப்பளித்து சமாதானத்திற்கான ஒரு வாய்ப்பை உருவாக்க புலிகள் இயக்கம் தீர்மானித்தது.

சிங்கள அரசுக்கும், புலிகள் இயக்கத்திற்குமிடையே பேச்சுவார்த்தையை ஏற்பாடுசெய்யமுயலும் மூன்றாந்தரப்பு நாடான நோர்வேயின் சிறப்புத்தூதர் எரிக் சுல்கைம் அவர்கள் கடந்த நவம்பர் 1ஆம் திகதி வன்னிவந்து, தலைவர் பிரபாகரனைச் சந்தித்திருந்தார்.

சமாதானத்திற்கான நம்பிக்கையை ஏற்படுத்திய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அந்தச் சந்திப்பில் தமிழரது தேசிய இனப்பிரச்சினையின் பரிணாம வளர்ச்சியை தலைவர் அவர்கள் தெளிவாக விளக்கியிருந்தார்.

'தமிழினத்தின் அழிவில்தான் இலங்கை இனப்போரின் தீர்வு உள்ளது' என்ற பேரினவாதத்தின் அரசியல் நிலைப்பாட்டையும் சுட்டிக் காட்டியிருந்தார். அத்துடன், 'சமாதானத்திற்கான போர்' என்ற பெயரில் சந்திரிகா அரசாங்கம் நடாத்திவரும் இன அழிப்பு முயற்சிகளையும் எடுத்துரைத்திருந்தார். அமைதிவழியில் தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு 'சிங்கள அரசு' ஒரு அரசியல் தீர்வு காண நேர்மையுடனும், உண்மையுடனும் உழைக்கமுன்வராது என்ற யதார்த்தத்தையும் தலைவர் அவர்கள் எடுத்துவிளக்கியிருந்தார்.

எனினும், இன்றைய சர்வதேச சூழலில், இலங்கைத்தீவின் இனப்போருக்கு அமைதிவழியில் தீர்வு காணப்படவேண்டும் என்ற உலக சமூகத்தின் விருப்பத்திற்கு ஒரு சந்தர்ப்பம் கொடுக்க புலிகள் இயக்கம் தயாராக உள்ளது என சொல்கெய்ம் அவர்களிடம் தலைவர் பிரபாகரன் உறுதியளித்திருந்தார்.

பரஸ்பர நல்லெண்ண சூழலை ஏற்படுத்துவதற்கு ஏதுவாகவும், புலிகளின் சமாதான விருப்பை சிங்கள அரசுக்கு உணர்த்துமுகமாகவும், தாக்குதல் நடவடிக்கைகளை தவிர்ப்பதாகவும், அச்சந்திப்பில் தலைவர் கருத்துத் தெரிவித்திருந்தார்.

அந்தச் சந்திப்பிற்குப் பின்னர் நவம்பர் 27 மாவீரர்நாள் செய்தியில் தலைவர் அவர்கள் தனது சமாதான நல்லெண்ணத்தை மீண்டும் வெளிப்படுத்தியிருந்தார். சிங்கள அரசுடன் பேச்சுவார்த்தை நடாத்தத் தயாராக இருப்பதாகவும் அறிவித்திருந்தார்.

மீண்டும் ஒருமாதம் கழித்து, சமாதான வாய்ப்பிற்குச் செயல்வடிவம் கொடுக்கும் எண்ணத்துடன் டிசம்பர் 24ஆம் திகதி ஒருதலைப்பட்சமாக போர்நிறுத்தத்தைப் பிரகடனப்படுத்தி, பேச்சுவார்த்தைக்கான நம்பிக்கையை பிரகாசம் அடையச் செய்வித்தார். ஒருமாத வரையறையைக் கொண்டிருந்த அப் போர்நிறுத்தத்தை மூன்று தடவைகள் நீடித்து சமாதான வாய்ப்பிற்கு உயிர்கொடுத்துக் கொண்டிருந்தார்.

இந்த நான்கு மாத போர்நிறுத்த காலத்தில், புலிகள் இயக்கம் மேலும் சில நல்லெண்ண சமிக்ஞைகளை செயலில் காட்டி சமாதான சூழலை உருவாக்குவதற்கான முன் முயற்சிகளில் இடையறாது ஈடுபட்டிருந்தது.

தம்மிடம் உள்ள போர்க்கைதிகளில் சிலரை கட்டங்கட்டமாக விடுதலை செய்திருந்தனர். தென் இலங்கையில் இருந்துவந்த சர்வ மதக்குழுவினரை வரவேற்று, கலந்துரையாடி புலிகளின் சமாதான நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியிருந்தனர்.

ஆனால், இவை எவற்றிற்குமே சந்திரிகா அரசாங்கம் செவிசாய்க்கவில்லை. புலிகளின் போர்நிறுத்த அறிவிப்புகளை அது தொடர்ச்சியாக நிராகரித்து வந்திருக்கின்றது. அத்துடன், போர்நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த புலிவீரர்கள் மீது, போர்த் தர்மத்திற்கு முரணாகவும், அநாகரீகமான வகையிலும் வலிந்த தாக்குதல்களையும், வான் தாக்குதல்களையும் நிகழ்த்தி புலிகளின் சமாதான முன்னெடுப்புக்களை சீர்குலைக்க முயன்றது.

அரச படைகளின் இந்த தாக்குதல்களில் 150ற்கும் மேற்பட்ட போராளிகளை இழந்த நிலையிலும், மோதல் தீவிரம் பெறாமல் தவிர்க்கும் எண்ணத்துடன் தாம் மீட்ட நிலப்பரப்பில் ஒருபகுதியை தாரைவார்த்த நிலையிலும் புலிகள் இயக்கம் பொறுமை காத்து, தாம் ஏற்படுத்திவரும் சமாதான சூழலை தக்கவைத்தபடி இருந்தனர்.

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive



வீர வணக்கம்

# கிடைக்கப் பெற்ற மாவீரர்களின் பெயர்கள்

25.04.2001 - 28.04.2001 வரை சிறீலங்காப் படைகளால் பெருமெடுப்பில் மேற்கொள்ளப்பட்ட அக்னி கீல-1 நடவடிக்கையை எதிர்த்து விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட முறியடிப்புத் தாக்குதலின்போது வீரச்சாவடைந்த மாவீரர்களில் கிடைக்கப் பெற்ற பெயர் விபரங்கள்.

- **மேஜர் வீரமறவன்** (தங்கராசா செல்வநந்தன் - முள்ளியவளை)
- **கப்டன் தவ்னிலா** (டெனிற் ஜின்சலா - வவுனியா)
- **கப்டன் பகீரதி** (கிருஷ்ணசாமி ரஞ்சனி - புளியம்பொக்கணை)
- **கப்டன் மதிநிலா** (சவுரி சுகந்தி - கரியாலை நாகபடுவான்)
- **லெப்டினன்ட் ஆதிரை** (மகாலிங்கம் ரஜனி - மன்னார்)
- **லெப்டினன்ட் சாலினி** (சுப்பிரமணியம் சுபாஷினி - கொழும்பு)
- **லெப்டினன்ட் இன்வேங்கை** (சிவராசலிங்கம் சிவநந்தினி -மாங்குளம்)
- **லெப்டினன்ட் சாந்தம்** (குமாரசாமி வசந்தமலர் - ஸ்கந்தபுரம்)
- **லெப்டினன்ட் குலமகள்** (தங்கச்செல்வரன் விஜிதா - யாழ்ப்பாணம்)
- **லெப்டினன்ட் இசைச்செல்வன்** (சுப்பிரமணியம் பிரபாகரன் யாழ்ப்பாணம்)
- **இரண்டாம் லெப்டினன்ட் அருள்மதி** (பாலகிருஷ்ணன் தனுஷ்யா - யாழ்ப்பாணம்)
- **இரண்டாம் லெப்டினன்ட் நந்தினி** (பட்டுராஜா பவளச்செல்வி- முழங்காவில்)
- **இரண்டாம் லெப்டினன்ட் சுடரசி** (இராஜேந்திரம் மாணிக்கமேரி - யாழ்ப்பாணம்)
- **வீரவேங்கை தமிழிசை** (குமாரசாமி லதா - யாழ்ப்பாணம்)
- **வீரவேங்கை குயிலினி** (மதுரைவீரன் செல்வி - விசுவமடு)
- **வீரவேங்கை வானரசி** (பாலன் சிவசோதி - யாழ்ப்பாணம் )
- **வீரவேங்கை சமாளினி** (குலம் ஜெகதீஸ்வரி - யாழ்ப்பாணம்)
- **வீரவேங்கை கதிருவ்ரன்** (கருப்பையா சசிகரன் வன்னி)
- **வீரவேங்கை கானகன்** (ரவீந்திரராசா விக்னேஸ்வரன் - யாழ்ப்பாணம்)
- **எல்லைப்படை வீரரான லெப்டினன்ட் அன்ராஸ்** (சின்னராசா அன்ராஸ் - யாழ்ப்பாணம்)
- **சிறப்பு எல்லைப்படை வீரரான லெப்டினன்ட் ராஜா** (சின்னையா சந்திரகுமார் - முருகண்டி)
- **மேஜர் வதனி** (தேவதாஸ் அருளப்பு மேரிஸி - யாழ்ப்பாணம்)
- **கப்டன் சாந்தீபன்** (திருநீலகண்டன் பாலசபேசன் - யாழ்ப்பாணம்)
- **கப்டன் கண்ணன்** (கருப்பையா ஜோன்சன் - மன்னார்)
- **இரண்டாம் லெப்டினன்ட் இளங்குயில்** (செல்வரத்தினம் சசிகலா - புதுக்குடியிருப்பு)
- **இரண்டாம் லெப்டினன்ட் இசைமதி** (நாகதேவன் நிஷாந்தினி - வவுனியா)
- **வீரவேங்கை திருவிழி** (நாகராசா சுகந்தினி பரந்தன்)
- **வீரவேங்கை நீலமொழி** (அந்தோனிப்பிள்ளை சகாயராணி - புதுக்குடியிருப்பு)
- **வீரவேங்கை புகழரசி** (சிவலிங்கம் காந்தினி - வவுனியா)
- **வீரவேங்கை தமிழருவி** (மரகதம் சிவமணி - திருகோணமலை)
- **வீரவேங்கை மதியரசி** (பாண்டியன் மோகனரூபினி - திருகோணமலை)
- **வீரவேங்கை பாவேந்தன்** (சோதிலிங்கம் சுந்தரவடிவேல் - யாழ்ப்பாணம்)

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

போர்நிறுத்தம் செய்ய தொடர்ச்சியாக மறுத்துவந்த சிங்கள அரசை சமாதான வழிக்குக் கொண்டுவரும் நோக்கத்துடன் 'புரிந்துணர்வுச் செயற்பாடு' என்ற நடைமுறையை வகுத்த நோர்வே அரசு அதை இருதரப்பினரும் பரிசீலித்து, ஒருமுடிவுக்கு வந்து பகைமைத் தணிப்பு நடவடிக்கையில் ஈடுபடவேண்டும் என்று கோரியது. இது தொடர்பான பூர்வாங்க கலந்துரையாடல்களை இரு தரப்பினருடனும் பல வாரங்களாக நடாத்தினர்.

புலிகள் இயக்கத்தின் சார்பில் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் நோர்வே பிரதிநிதிகளை லண்டனிலும், நோர்வே தலைநகர் ஒஸ்லோவிலும் பல தடவைகள் சந்தித்து, சமாதான சூழ்நிலையை உருவாக்க சிங்கள அரசு செய்யவேண்டிய விடயங்களை இனங்காட்டியிருந்தார்.

ஆனால், சமாதானப்பேச்சை நடாத்துவதற்கான ஒரு உகந்த சூழ்நிலையை உருவாக்கும் இலக்கைக்கொண்ட இந்தப் புரிந்துணர்வு உடன்பாட்டை 'மனிதாபிமானச் செயற்பாடுகளுக்கான உடன்பாடு' என சிங்கள அரசு பெயர் மாற்றம் செய்துள்ளது. அத்துடன், முன்பு கலந்துரையாடப்பட்ட விடயங்கள் நோர்வே அரசினால் முதலில் தரப்பட்ட வரைபில் உள்ள பல விடயங்களை நீக்கிய சிங்கள அரசு சில விடயங்களை தனக்குச் சார்பானதாக மாற்றியமைத்தும் உள்ளது.

சிங்கள அரசு திருத்திய இந்த வரைபு தொடர்பாக புலிகள் இயக்கத்தின் கருத்துக்களைப் பெற்று உடன்பாட்டை கையெழுத்திடும் நிலைக்கு உயர்த்தும் எண்ணத்துடன் இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் அவர்களின் தலைமையிலான குழுவினர் வன்னி சென்றிருந்தனர்.

புலிகள் இயக்கத்தின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் அவர்களின் தலைமையிலான குழுவினர் நோர்வே அரசின் தூதுக்குழுவை 06-04-2001 அன்று சந்தித்து நீண்டதொரு கருத்துப்பரிமாற்றத்தை நடாத்தியிருந்தனர்.

நோர்வே அரசு பெயர்சூட்டி முன்னர் பூர்வாங்க கலந்துரையாடல்களின்போது ஆராயப்பட்ட புரிந்துணர்வு உடன்பாடு என்ற வரைபின் தலைப்பை சிங்கள அரசு மாற்றியதையிட்டு புலிகளின் பிரதிநிதிகள் நோர்வே தூதுக்குழுவிடம் தமது கடுமையான கண்டனத்தைத் தெரிவித்திருந்தனர். சிங்கள அரசு செய்த பெயர் மாற்றத்தை நிராகரித்த புலிகளின் பிரதிநிதிகள் முன்னைய வரைபின் பிரகாரம் புரிந்துணர்வு உடன்பாடு என்றே இருக்கவேண்டும் என்று நோர்வே தூதுக்குழுவிடம் வலியுறுத்தியிருந்தனர்.

போரில் ஈடுபட்டிருக்கும் தமிழ், சிங்கள தேசிய இனங்களிடையே ஒரு புரிந்துணர்வை உருவாக்கி, போரை நிறுத்தி, ஒரு சமாதான சூழலை ஏற்படுத்தும் இலக்குடனேயே அந்த உடன்பாட்டை நோர்வே அரசு கொண்டுவந்தது. இதுவொரு அரசியல் விடயம். ஆனால், இந்த உண்மையை ஒப்புக்கொள்ள சிங்கள அரசு விரும்பவில்லை. பதிலாக இந்த அரசியல் போரை சிங்களப் படைகளுக்கெதிரான ஆயுத மோதலாக, பயங்கரவாத நடவடிக்கையாக திரித்துக்காட்டி போருக்கான மூலகாரணியான அரசியலை மழுங்கடிக்க சிங்கள அரசு முயன்றது. எனவேதான் அரசியல் அர்த்தம் கொண்டதும், மிகச் சரியானதுமான புரிந்துணர்வு உடன்பாடு என்ற சொற்பதத்தை நீக்கி, மனிதாபிமானச் செயற்பாடுகளுக்கான உடன்பாடு என சிங்கள அரசு பெயர்மாற்றம் செய்ய விரும்பியது. சிங்கள அரசின் இந்த சதித்திட்டத்தை புலிகள் இயக்கம் அனுமதிக்கமாட்டாது.

இதேவேளை புலிகளுடன் பேசும் காலம் வந்துவிட்டது என்று உலகிற்குக் கூறிக்கொண்டே புலிகள் இயக்கத்தின்மீதும், அதன் தலைமைப்பீடம் மீதும் சேறு பூசுவதிலும், சீண்டுவதிலும் சிங்கள அரசு ஈடுபட்டது. இது சமாதான முயற்சிகளுக்கு குந்தகம் விளைவிக்கக்கூடியது. இத்தகைய சமாதான விரோதப்போக்குகளை உடனடியாக நிறுத்தி, பகைமையைத் தணித்து ஒரு ஆரோக்கியமான சூழலை ஏற்படுத்த அரசு முன்வரவேண்டும்.

இதற்கு முன்னோடியாக புரிந்துணர்வு உடன்படிக்கையைக் கொண்டுவந்து, போர்நிறுத்தத்தைப் பிரகடனப்படுத்தி பொருளாதாரத் தடைகளை அகற்றி தமிழ் மக்கள் ஒரு இயல்பு வாழ்க்கை வாழ அரசு அனுமதிக்கவேண்டும். போர் நீங்கி, மக்கள் ஒரு இயல்பு வாழ்க்கை வாழும் ஆரோக்கியமான சூழலில் பேச்சுவார்த்தைகள் நடைபெறவேண்டும். இருபகுதியினர்க்குமிடையேயான பேச்சுவார்த்தைகள் சமத்துவமான வகையில் நடைபெறுவதற்குக் குறுக்காக புலிகள் இயக்கம் மீதான சிங்கள அரசின் தடையுள்ளது. சிங்கள அரசு பேச்சுவார்த்தை மேசையிலும், புலிகள் இயக்கம் குற்றவாளிக் கூண்டிலும் நின்றவாறு பேச்சுவார்த்தைகள் நடைபெறுவது கேலிக்கிடமாக இருக்கும். எனவே புலிகள் இயக்கம்மீதான தடையை அகற்றி தமிழ் மக்களின் சட்டபூர்வ பிரதிநிதிகளாக விடுதலைப் புலிகளை ஏற்றுக்கொள்ளும் சூழ்நிலையிலேயே நேரடிப் பேச்சுக்களில் ஈடுபடக்கூடிய வாய்ப்புக்கள் ஏற்படும்.

அரசியல் பேச்சுக்கள் தொடங்குவதற்கு மேற்குறிப்பிட்ட தடைகள் அகற்றப்பட்டு ஒரு உகந்த சூழ்நிலையை சிங்கள அரசு ஏற்படுத்தி சமாதானத்தின்பால் தான்கொண்டுள்ள உறுதியையும் நேர்மையையும் அது நிரூபிக்கவேண்டும். ■

# அரசு பகிர்ந்துகொள்ள நினைப்பது பரஸ்பர உறவா? பகையா?



அனுரன் விஜேந்திரா பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியது இங்கு கவனிப்பதற்குரியது.

'யுத்தநிறுத்தம் புலிகளின் சந்தர்ப்பவாத செயல்' 'புலிகள் யுத்தத்தில் இராணுவ ரீதியாக பலவீனப்பட்டுப்போயுள்ளதாலேயே தம்மைப் பலப்படுத்திக்கொள்ளும் அவகாசத்திற்காக யுத்தநிறுத்தத்தை கோருகின்றனர்' 'களத்தில் இராணுவத்தினரின் கைகள் மேலோங்கியுள்ளதால் புலிகள் யுத்தநிறுத்தம் கோருகின்றனர்' நோர்வே அரசின் சமாதான முயற்சியை ஆர்வமாக வரவேற்ற தமிழீழ விடுதலைப் புலிகள், போரில் ஈடுபடும் இருதரப்பும் பரஸ்பர நல்லெண்ணத்தை பரிமாறிக்கொள்ள வேண்டுமென்று அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, ஒருதலைப்பட்சமாக யுத்த நிறுத்தத்தை அறிவித்து, தமது நல்லெண்ணத்தை வெளிப்படுத்திப் பதிலுக்கு அரசிடமிருந்தும் இத்தகைய நல்லெண்ணச் சமிக்ஞை கிடைக்கப்பெறும் சந்தர்ப்பத்தில் கட்டிவளர்க்கப்பட்ட நல்லெண்ணச் சூழலில் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க ஆர்வமாக இருந்தவேளையில், அரசிடமிருந்து எழும்பிய பதில் கருத்துகளே இவையாகும்.

யுத்தநிறுத்தத்தைத் தட்டிக்கழிப்பதற்கு அரசு அளித்த இந்த வியாக்கியானத்தின் உண்மை நிலை என்ன?

யுத்தத்தில் ஈடுபடும் இருதரப்பின் பலம், பலவீனங்களைக் கணிப்பிடவேண்டுமாயின் முழுமையான யுத்தநிலைமையை ஆராயவேண்டியது அவசியம். நடந்து வரும் போரின் முழுமையான யுத்த நிலைமை என்பது வடபோர்முனையிலிருந்தே கணிப்பிடக்கூடியது. இது முழுமையான யுத்தத்தின் பகுதியேயாயினும் இதுவே மூலோபாயரீதியில் முழுமையான யுத்தத்தைத் தீர்மானிக்க வல்லதும் தீர்க்கமானதுமான போர்முனையாக உள்ளது.

எதிர்பார்க்கப்படுவதற்கான, வெற்றிகொள்வதற்கான இருதரப்பினரதும் மூலோபாயம் இங்கேயே மையப்படுத்தப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணத்தை இராணுவம் ஆக்கிரமித்ததின் அதற்கான தரைவழிப்பாதையைத் திறப்பதற்காகவும், வன்னியை வெற்றிகொள்வதற்கான மூலோபாய நகர்வாகவும் 'சத்ஜெய', 'ஜெயசிக்குறு' ஆகிய நடவடிக்கைகள் படைத்தரப்பால் மேற்கொள்ளப்பட்டன. பின்னர் 'ரணகோஷ' நடவடிக்கையும் இதன் நோக்கமாக இணைந்துகொண்டது. [illegible] இத்தகைய இராணுவ நோக்கத்திற்காக படைத்தரப்பு வன்னிப் பெருநிலப்பரப்பின் பல முனைகளால் முன்னேறியிருந்தது. [illegible] தனது இராணுவ நோக்கத்திற்காக மீண்டும் மீண்டும் அது மிகக் கடுமையான முயற்சியை எடுத்திருந்தது. [illegible] முன்னேற்றத்தினால் நடவடிக்கையின் [illegible] தமது பலத்தில் அடைந்த வெற்றியிலும் இராணுவம் நம்பிக்கைகொண்டிருந்தது. வன்னிப் போர்முனையிலான வெற்றி, முழுமையான யுத்தநிலைமையை தலைகீழாக மாற்றியமைக்கக்கூடியது என்றவகையில் படைத்தரப்பு தனது முழுதாக்குதிறனையும் இந்த நடவடிக்கையில் ஒருமுகப்படுத்தியது. முன்னேறிய ஒவ்வொரு அங்குலத்திற்கும் பெருமளவு உயிர்களை விலையாகக்கொடுக்க நேர்ந்தபோதும் புலிகள் மீதான வெற்றியை அடைவதற்கான திறவுகோலாக அதற்கான விலையாக இழப்புகளை ஜீரணித்துக்கொண்டது. அல்லது வெற்றி மீதான நம்பிக்கையில் எத்தகைய விலையையும் கொடுக்க படைத்தரப்புத் தயாராக இருந்தது.

இச்சூழ்நிலையில், புலிகளின் ஓயாத அலைகள் 3 என்ற நடவடிக்கை குறுகிய கால இடைவெளிக்குள் இராணுவத்தால் கடந்த மூன்றாண்டு காலமாக ஆக்கிரமிக்கப்பட்ட முழு நிலங்களையும் விடுவித்ததுடன் மணலாற்றுப் பிரதேசத்தில் 1984 இல் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட 'சிலோன் தியேட்டர்' ஒதியமலை, தனிக்கல் போன்றவற்றையும் மீட்டதோடு இறுதியாக, பலப் பரீட்சையின் அல்லது இராணுவத்தின் இயலுமையின் [illegible] விருந்த ஆனையிறவுத் தளத்தை [illegible] கொண்டு ஓயாத அலைகள் 3 யாழ். தென்மராட்சி நோக்கிப் பிரவேசித்தது.

இந்த பிரமிப்பான இராணுவச் சாதனையில் வெல்லப்பட்டது வெறும் நிலப்பரப்புக்கள் அல்ல. இராணுவப் பெருந்தளங்களோ மட்டுமல்ல. முழுமையான யுத்தநிலைமையில் இந்த வெற்றியின் தாக்கம் எவ்வாறானதெனின், இராணுவத்திலுடைய புலிகள் மீதான போர் நடவடிக்கையின் மூலோபாயத்தை புலிகள் சிதறடிக்கச் செய்துவிட்டனர் என்பதே. இறுதி இலக்கிற்காக இராணுவம் கொடுத்த உயிர்விலையும், புலிகளின் ஓயாத அலைகள் 3 நடவடிக்கையில் அடைந்த உயிரிழப்புக்களும் [illegible] இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன், இதைவிட அதிகமானோர் காயமடைந்து எதிரியின் போர்வலு சிதைவுற்றது. குறுகிய காலத்தில் மீளொழுங்குபடுத்தப்பட முடியாதவாறு படைக்கட்டமைப்பு வலு உருக்குலைந்தது. இராணுவம் தனது போரிடும் ஊக்கத்தை, தாக்கு மனநிலையை இழந்தது. எதிரியின் தாக்குதிறனை வெற்றிகரமாக சிதைவுறச் செய்வதில் புலிகள் வெற்றிகண்டனர். ஆட்லறிகள், மோட்டார்கள் அதற்கான எறிகணைகள் உட்பட பல ஆயிரம் கோடி ரூபா பெறுமதியான ஆயுத தளபாடங்கள் புலிகளின் ஆயுதக் களஞ்சியங்களை நிரப்பின.

யாழ்ப்பாணத்தின் மூன்று நுழைவாயில்களையும் புலிகள் கைப்பற்றியதனூடாக, முப்பதாயிரம் துருப்புக்களை பிறைவடிவில் சுற்றிவளைத்து அடுத்த கட்டத்திற்கான போர் வியூகத்தை தமக்குச் சாதகமாக்கிக்கொண்டனர். இத்தகைய பின்னணியில், அரசு அக நிலையிலும், புறநிலையிலும் இறுகிப்போய்நின்ற கட்டத்தில் முழுமையான யுத்த நிலையின் மதிப்பீட்டைச் சுருங்கக் கூறுவதாயின், அடுத்து களமுனையில் நிகழக்கூடியவற்றை கணிப்பீடுசெய்ய முடியாதவாறும், களநிலைமை கட்டுப்பாட்டிற்குள் இருப்பதை உறுதி செய்ய முடியாததுமான நிலையிலேயே படைத்தரப்பு உயர்பீடம் இருந்தது.

இத்தகைய சூழ்நிலையில்தான் நோர்வேயின் சமாதான முயற்சிக்கான அழைப்பிற்கு அரசும் இணங்கியதற்கேற்ப, புலிகள் அதனை வரவேற்று சமாதான வழிமுறை மூலம் பிரச்சினைக்கு தீர்வுகாண தமது ஆர்வத்தை வெளிப்படுத்தினர். இத்தகைய ஒருநிலையை எட்டுவதற்காக ஏற்படுத்தப்படவேண்டிய நல்லெண்ண சூழலை உருவாக்கும்பொருட்டு புலிகள் ஒருதலைப்பட்சமான யுத்தநிறுத்த அறிவிப்பை விடுத்திருந்தனர். இதனை 'களத்தில் இராணுவத்தின் கைமேலோங்கி நிற்பதால் புலிகள் யுத்தநிறுத்தமொன்றைச் செய்கின்றனர்' என்று அரசு வாதித்தால் அது இந்த புத்தாயிரம் ஆண்டின் பரிசிற்குரிய நகைச்சுவையாகின்றதா?

தவிரவும், புலிகளின் யுத்தநிறுத்த அறிவிப்பை தந்திரோபாயமாகப் பயன்படுத்தியதன் மூலம், படை ஒருமுகப்படுத்தலைச் செய்யமுடிந்த இராணுவம் கைதடி, நாவற்குழி, தனங்கிளப்பு ஆகிய பகுதிகளை நோக்கி முன்னேறமுடிந்தது. இதனால், புலிகள் ஒரு தந்திரோபாயப் பின்வாங்கலை செய்ததினூடாக படைத்தரப்பு மீளவும், அப்பிரதேசத்தை ஆக்கிரமித்துக்கொண்டது. இதன்பின், இந்நடவடிக்கையை வழிநடத்திய வடபோர்முனைக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திரா பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியது இங்கு கவனிப்பதற்குரியது.

**கேள்வி:** 'ரிவிரெச' 'கினிகிர-8' இராணுவ நடவடிக்கைகள் ஊடாக பாதுகாப்புப் படையினரால் கைப்பற்றப்பட்ட இப்பிரதேசங்களில் இராணுவ தந்திரோபாய ரீதியாக ஏதேனும் பெறுமதி உண்டா?

**பதில்:** இப்பிரதேசங்கள் புலிகளின் கட்டுப்பாட்டிற்குள் இருக்குமாயின் யாழ்ப்பாணத்தை எந்தச் சந்தர்ப்பத்திலும் இலகுவாக புலிகள் தாக்கக்கூடிய ஓர் நிலையிருந்தது.

ஆக, புலிகள் ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்த அறிவிப்பை விடுக்கும்போது, யாழ்ப்பாணம் எந்த நிலையிலும் தாக்கப்படவும், புலிகளின் கையில் விழவும்கூடும் என்னும் யதார்த்த நிலைமை இருந்ததை வடக்கு கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திரா ஒப்புக்கொள்கின்றார். ஆயின், எதற்காக ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்தம் 'பலவீனத்தின் வெளிப்பாடு' என்றும் 'புலிகளின் சந்தர்ப்பவாத நிலை' என்றும் அரசு குட்டையைக் குழப்புகின்றது.

அரசு புலிகளின் மீதான இறுதி வெற்றி பற்றி சிங்கள மக்கள் மத்தியில் கட்டி வளர்த்த கருத்து மாயையால் அரசபடைகள் அடைந்த மிக மோசமான தோல்வி காரணமாக சிங்கள மக்கள் அரசு மீது சீற்றம்கொண்டுள்ளனர். இச் சந்தர்ப்பத்தில் அரசு யுத்தநிறுத்தத்திற்கு உடன்படுவது அரசின் இயலாமையாக சிங்கள மக்களால் கோரப்படும் என்ற அச்சம் ஒருபுறம். இதனால் இனவாதத்திற்குத் தலைமை தாங்கிவந்த சந்திரிகா அரசிற்குப் போட்டியாக புதிய வீச்சுடன் வேகமாக முன்னேறிவரும் ஜே.வி.பி. 'சிஹல உறுமய' போன்ற கட்சிகள் சிங்கள இனவாதத்திற்குப் புதிய தலைமையை அளித்து விடும் அல்லது தனது அரசியல் பலத்தை உடைத்துவிடும் என்ற அச்சம் அரசிடம் உண்டு.

மறுபுறம், இராணுவத்தில் ஒரு தாழ் நிலையில் இருந்துகொண்டு பேச்சுவார்த்தை மேசையில் அமர்வதால் புலிகளிடம் விட்டுக்கொடுக்க நேரிடும் [illegible] இதனால் சர்வதேச சமூகத்தின் அழுத்தங்களோடு மூன்றாம் தரப்பின் ஆதரவில் நிகழக்கூடிய இப்பேச்சுவார்த்தையில் இனப்பிரச்சினைக்கான தீர்வாக சர்வதேச சமூகம் எதிர்பார்ப்பதற்கேற்றவும் உடன்படத் தயாரில்லாத தனது இனவாத முகம் அம்பலமாகிவிடும். இதனால் தனக்கு ஏற்படும் அழுத்தமும் புலிகளின் நியாயப்பாடு மேலும் வலுவடையுமென்று அரசு அஞ்சுகிறது.

மற்றும் பிரித்தானிய பயங்கரவாதச் சட்டம் கொண்டு வர இருந்த நிலையில் யுத்தநிறுத்தம் செய்து பேச்சில் ஈடுபட நேர்ந்தால் பிரித்தானியாவில் புலிகள் [illegible]

> **அரசு யுத்தநிறுத்தத்திற்கு உடன்படுவதை தவிர்த்தாலும் நோர்வேயின் சமாதான முயற்சியை எதிர்த்து மறுக்காமல் தனது உடன்படாமைக்குப் புதிய வியாக்கியானங்களை அளித்து, கால இழுத்தடிப்பைச் செய்வதன் மூலம் அவகாசத்தைப் பெற்றுக்கொண்டு இராணுவத்தில் வரும் தயார்ப்படுத்தலுடன் புலிகள் மீதான ஒருவெற்றியை நிலைநாட்டுவதே வேண்டுமென அரசு அவாவுகின்றது.**

# சிறீலங்கா இராணுவத்தின் பெரும் பலம்கொண்ட தீச்சுவாலையை எமது தலைவர் அவர்களின் திட்டத்திற்கு அமைய செயற்பட்டு வெற்றிகொண்டோம்

## 'தீச்சுவாலை' படை நடவடிக்கை குறித்த தளபதி கேணல் தீபனின் விளக்கம்



"நான்கு மாதகால திறமையான பயிற்சிகளும் சிங்களத்தில் அதி உயர் வலுக் கொண்ட 15 ஆயிரம் இராணுவத்தினர் கடல் வான் படைகளின் தக்க பலத்துடன் ராங்கிகள், ஆட்லறிகள், பல்குழல் எறிகணைச் செலுத்திகளின் சூட்டாதரவோடு மேற்கொண்ட சிறீலங்காப் படைகளின் தீச்சுவாலை நடவடிக்கையை தேசியத் தலைவர் அவர்களின் சிறப்பான திட்டமிடலில் செயற்பட்டு வெற்றிகரமாக முறியடித்தோம்" என தீச்சுவாலை முறியடிப்பு மற்றும் தற்காப்புச் சமரை ஒருங்கிணைத்து நெறிப்படுத்திய தளபதி கேணல் தீபன் தெரிவித்துள்ளார்.

"கண்டிவீதியின் கிழக்குப் புறமாக கடலேரி கண்டல் வரையான பகுதிகளில் 55ஆம் டிவிசனின் இராணுவ அணிகள் முன்னேறின. பின்னணியில் ஆட்லறிகள் மோட்டார்கள் பல்குழல் எறிகணைச் செலுத்திகள் குண்டுகளை ஆயிரக்கணக்கில் மழைபோல் பொழிந்து கொண்டிருந்தன. 10 நிமிடங்களுக்கு ஒரு தடவை வான் படையின் மிகையொலி வேக விமானங்கள் புதிது புதிதாக வந்து பாரிய குண்டுகளை வீசின.

பன்னீராயிரம் படையினர் 8 கிலோமீற்றர் அகலமான கண்டல் முதல் கிளாலி கடல்நீரேரி வரையான பகுதிகளில் நகர்ந்தனர். 3000 படைகள் பின்னணி செயற்பாடுகளை மேற்கொண்டன.

நான்கு மாதகால சிறப்புப் பயிற்சிகளுடன் டாங்கிகள் சகிதம் இராணுவம் விடுதலைப் புலிகளின் நிலைகளைக் கடந்து ஒன்றரைக் கிலோமீற்றர் தூரம் நகர்ந்திருந்தது. கிளாலிக் கரையோரமாக சிறீலங்காக் கடற்படைக் கலங்கள் எஸ்.எ பிரிகேட் படையினருக்கு ஆதரவாக தாக்குதலை நடத்தின.

இத்தகைய எதிரியின் பலமான நகர்வுக்கு எதிரான தற்காப்புச் சமரையும் முறியடிப்புச் சமரையும் இந்தக் களமுனையில் இருந்த விடுதலைப் புலிகளின் அணிகள் வலுவுடன் மேற்கொண்டு எதிரிக்கு பாரிய இழப்பை ஏற்படுத்தி வெற்றிகரமாக முறியடித்தன. இந்த முறியடிப்புச் சமரில் கிளாலியில் இருந்து நகர்ந்த கொமாண்டோ படைகளையும் கண்டல் கடலேரிப்பகுதி ஊடாக நகர்ந்த 55ஆம் டிவிசனின் ஒரு பகுதி படைகளையும் சோதியா படையணி எதிர்கொண்டு பலத்த தாக்குதல்களை நடத்தியது.

இப்படையணியினர் எதிரிக்குப் பலத்த இழப்புகளை ஏற்படுத்தினர். கண்டல் கடலேரி ஊடாக நகர்ந்த படைகளை எதிர்கொண்ட தாக்குதலில் படைத்தரப்பிற்கு பலத்த இழப்புக்களை ஏற்படுத்திய சோதியா படையணியின் லெப்ரினன் கேணல் சுதந்திரா உட்பட பலர் உயிரிழந்துள்ளனர்.

கண்டிவீதியுடன் மேற்குப் பகுதியில் நகர்ந்த 55ஆம் டிவிசன் இராணுவத்தின் மீது தற்காப்பு மற்றும் முறியடிப்புச் சமரை சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி நடத்தியது. கண்டிவீதியை அண்டிய பகுதியில் நகர்ந்த படைகளுக்கு எதிராக மாலதி படையினர் தீரமிகு தாக்குதலை நடத்தினர்.

கிளாலியை அடுத்த கரையோரமாக நகர்ந்து முன்னேறிய 53ஆம் டிவிசன் படைகளுக்கு எதிராக எல்லைப் படை, சிறப்பு எல்லைப்படை வீரர்கள் உறுதியுடன் எதிர்கொண்டு எதிரிக்கு பலத்த இழப்புகளை ஏற்படுத்தினர். 8 கிலோமீற்றர் முன்னணி சமர்க்களப்பகுதி லெப்ரினன் கேணல் கோகுலன், லெப்ரினன் கேணல் துர்க்கா, லெப்ரினன் கேணல் வீரமதி, லெப்ரினன் கேணல் லோறன்ஸ், லெப்ரினன் கேணல் சுதந்திரா ஆகியோராலும் வழிநடத்தப்பட்டது. மாலதி படையணியை அதன் சிறப்பு தளபதி விதுசா நெறிப்படுத்தினார். எல்லைப்படை, சிறப்பு எல்லைப்படை என்பவற்றை சுட்டா வழிப்படுத்தினார்" என சமர்முனையை ஒருங்கிணைப்புச் செய்த கேணல் தீபன் தெரிவித்தார்.

"முன்னணி முனைகளுக்கு அடுத்த கட்ட முனையை தளபதி கேணல் பால்ராஜ் நெறிப்படுத்தினார். எதிரிக்கு எதிரான துல்லியமான பீரங்கித் தாக்குதல்களை கேணல் கிட்டு பீரங்கிப் படையணி சிறப்புத் தளபதி கேணல் பானு நெறிப்படுத்தினார்.

கடற்படையினருக்கு எதிரான தாக்குதல்களை தளபதி அறிவு தலைமையிலான கடற்புலிகள் அணி நடத்தியது. களமுனையில் இருக்கின்ற பலத்தைக் கொண்டு எதிரியின் ஆனையிறவு பெருங்களப் படை நடவடிக்கையான தீச்சுவாலையை உடைத்து அழித்தோம். இந்த வெற்றிக்கு முக்கியமான காரணம் எமது தலைவர் அவர்களின் சிறந்த திட்டமிடலும் அந்த திட்டத்திற்கு அமைய இந்த சமரில் போராளிகள், பொறுப்பாளர்கள், தளபதிகள் ஆகியோரின் செயற்பாடுகள் சரியாக அமைந்திருந்ததே ஆகும். பதினையாயிரம் படையினரையும் கடல் வான் படைகளையும் சிறீலங்கா இராணுவத்தின் பெரும் பலம் கொண்ட தீச்சுவாலையை எமது தலைவர் அவர்களின் திட்டத்திற்கு அமைய செயற்பட்டு வெற்றி கொண்டோம்.

இந்தச் சமரில் 400ற்கும் அதிகமான படையினர் கொல்லப்பட்டனர். 2000ற்கும் அதிக படையினர் காயமடைந்தனர். இரண்டு டாங்கிகள் ஒரு எம்ஐ-24 உலங்குவானூர்தி என்பன சேதமாக்கப்பட்டன.

படையினரால் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட எறிகணைகள், பீரங்கிக் குண்டுகள் பல்குழல் எறிகணைகள், விமானக் குண்டுகள் என்பன 60 மணி நேர தீச்சுவாலை மற்றும் முறியடிப்புச் சமர்க்களத்தில் வீசப்பட்டன" எனவும் தளபதி கேணல் தீபன் தெரிவித்தார். ■

---

மீதான தடை தடைப்பட்டுப் போய்விடும் என்று அரசு எண்ணியது. இத்தகைய காரணங்களினால் அரசு யுத்தநிறுத்தத்திற்கு உடன்படுவதை தவிர்த்தாலும் நோர்வேயின் சமாதான முயற்சியை எதிர்த்து மறுக்காமல் தனது உடன்பாமைக்குப் புதிய வியாக்கியானங்களை அளித்து, கால இழுத்தடிப்பைச் செய்வதன் மூலம் அவகாசத்தைப் பெற்றுக் கொண்டு இராணுவரீதியில் பெரும் தயார்ப்படுத்தலுடன் புலிகள் மீதான ஒருவெற்றியை நிலைநாட்டிவிட வேண்டுமென அரசு அவாவுகின்றது. இதன் மூலம் இராணுவ மேலாதிக்க நிலையில் இருந்து கொண்டு, தமிழர் மீது இனவாதத்தின் தீர்வொன்றை திணித்துவிடலாம் என்று அரசு முயற்சிக்கின்றது. இதற்கான அசைவுகளையே அரசிடம் அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

ஐரோப்பிய நாடுகளிடம் புலிகளைத் தடைசெய்யக் கோரிவருகின்றது அரசு. அதேநேரம் பாகிஸ்தான், இந்தியா, செக் குடியரசு ஆகிய நாடுகளிடமிருந்து பெருமளவில் முப்படைக்குத் தேவையான ஆயுதங்களைக் கொள்வனவு செய்து குவிக்கின்றது. மற்றும், அந்த நாடுகளின் அமைச்சுப் பொறுப்பில் உள்ளவர்களுடனும், இராணுவ அதிகாரிகளுடனும், ஆயுத விற்பனையாளர்களுடனும் கொழும்பு நீண்டதொடர்பைக் கொண்டுள்ளது. கொழும்பினுடைய நடவடிக்கைகள் ஒரு சமாதானத்திற்கான ஆயத்தப்படுத்தலாக எவராலும் கணிக்கப்படக்கூடியதாக இல்லை.

**ஆ. கனியமுதன்**

வடக்கு கட்டளைத் தளபதி அன்ரன் விஜேந்திரா 'அரசாங்கம் போதிய பலத்துடன் சமாதானப் பேச்சுவார்த்தையில் பங்குபற்றப் போவதாக தீர்மானிப்பதாயின் அதற்குத் தேவையான சூழல் இன்று இருக்கின்றது' என்கிறார். மேலும் அவர், 'ஆனையிறவு எங்கள் கட்டுப்பாட்டில் இருந்த பிரதேசம். மனோநிலை ரீதியாக எங்களுக்குத் தாக்கம் ஏற்பட்டபோதும் அதனைக் கூடிய விரைவில் கைப்பற்றும் நோக்கம் எங்களிடம் உண்டு' (லக்பிம 14-02-2001) என்று கூறுவதில் அரசு ஒரு யுத்ததயார்ப்படுத்தலைச் செய்கின்றது என்பதைத் தவிர வேறு எதுவும் தொனிக்கவில்லை.

சிறீலங்கா சுதந்திரக்கட்சி செயலாளரும் அமைச்சருமான எஸ்.பி. திஸநாயக்காவும் 'தொடர்ச்சியான பின்னடைவு காரணமாக எல்.ரி.ரி. யுத்தநிறுத்தத்தை அறிவித்துள்ளது எல்.ரி.ரி.யுடனான கொடுக்கல் வாங்கல்களுக்கு முடிவுகட்டவே நாம் தயாராகிவருகின்றோம்' என்று கூறுகின்றார்.

மேலும் பிரதம மந்திரி, பிரதிப் பாதுகாப்பு அமைச்சர், ஜனாதிபதி ஆகியோரும் இத்தகைய கருத்துக்களையே முன்வைக்கின்றனர்.

வெளிவிவகார அமைச்சர் தனது இந்திய விஜயத்தின்போது அளித்த பேட்டியில் 'சர்வதேச சமூகம் இலங்கையின் ஐக்கியம், இறைமை, ஒருமைப்பாடு ஆகியவற்றை வலியுறுத்துவதால் அதனை ஏற்றுக்கொள்ளச் செய்வதற்காக புலிகள் மீது ஒரு படைநடவடிக்கை அவசியம்' என்கிறார். இவையெல்லாம் அரசின் உள்ளார்ந்த நோக்குகளையும், பேச்சுவார்த்தை பற்றிய அணுகுமுறையையும் தெளிவாகக் காட்டுகின்றன.

அது இராணுவம் தனது முழுமையான இலக்கை அடையும்வரை சிங்கள அரசு தனது இனவாத மனோபாவத்திலிருந்து மாறப்போவதில்லை என்பதைத் தவிர வேறு எதனையும் இதிலிருந்து நாம் விளங்குவதற்கில்லை. அத்துடன் சர்வதேச சமூகம் இலங்கையின் ஐக்கியம், இறைமை, ஒருமைப்பாட்டை வலியுறுத்துவதால் அதனை ஏற்றுக்கொள்ளவைக்க புலிகள் மீது ஒரு படைநடவடிக்கை அவசியம் என்றவகையில் சர்வதேச சமூகம் தமிழரின் தாயகப்பூமி, சுயநிர்ணய உரிமை, சுயாட்சி அலகு என்பவற்றை வலியுறுத்திவரும்போது அதனை ஏற்றுக்கொள்ளாத அரசு மீது ஒரு படை நடவடிக்கையை செய்வது பேச்சுவார்த்தைக்கு அவசியம் இல்லையா என்ற கேள்வியும் சேர்ந்தே எழுகின்றது. ■

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive




# இந்திய ஆக்கிரமிப்புப் படையினர் தமிழீழ மண்ணை ஆக்கிரமித்திருந்த காலத்தில் ஒரு அப்பாவி இளைஞனுக்கு நடந்த கொடுமையின் பதிவு இது

குருநகர் பெரியகோவிலுக்கு (புனித மரியன்னை தேவாலயம்) அருகில் எங்களது வீடு. அம்மாவும் நானும் அண்ணனுமாக மூன்று பேரே வசித்துவந்தோம். அப்பா வெளிநாடு சென்றுவிட்டார்.

இந்தியப்படையினர் நம் மண்ணை ஆக்கிரமித்திருந்த காலமது. எங்கள் குடும்பத்தில் இடிவிழுந்ததுபோல் ஒரு கொடிய நிகழ்வு நடக்கும் என்பதற்கான அடையாளங்கள் எதுவுமின்றி அந்தநாள் விடிந்தது. 1988ம் ஆண்டு, 26ம் திகதி, அது ஒரு சனிக்கிழமை.

பெரிய கோவிலில் ஓர்கன் வாசிப்பது அண்ணனின் பணி. அன்றைய நாளும் அப்படித்தான், மறுநாள் திருப்பலிப் பூசையின்போது ஓர்கன் வாசிப்பதற்கான பயிற்சிக்காக எனது அண்ணன் பெரிய கோவிலுக்குச் சென்றிருந்தார். அன்று திருக்கோவில் பணிக்காகச் சென்ற எனது அண்ணனை, விடுதலைப் புலி எனப் பிடித்துச் சென்ற இந்தியப்படையினர், மோசமாகச் சித்திரவதை செய்து கொன்றுவிட்ட கொடுமையின் அழியாத கொடுமையை என்னவென்று விபரிப்பது.

அன்றையதினம், கோவில் வளவிற்குள் விடுதலைப் புலி உறுப்பினர்கள் இருவர் நின்றிருந்தனர். இந்திய ஆக்கிரமிப்புப் படையுடன் இணைந்து செயற்பட்ட கூலிக்கும்பலைச் சேர்ந்தவர்களை எதிர்பார்த்திருந்தது போல அவர்களது செய்கைகள் இருந்தன. வீதியை அடிக்கடி நோட்டமிட்டவாறு அவ்விருவரும் சாவகாசமாகப் பேசிக்கொண்டிருந்தனர்.

காத்திருந்த போராளிகளில் ஒருவர் எனது அண்ணனுக்குப் பழக்கமானவர்.

அட்டூழியங்களுக்கும், அடாவடித்தனங்களுக்கும் பேர்போன, கூலிக்குழு உறுப்பினனான அப்துல்லா மற்றும் ரவி ஆகிய இருவருக்கும் குறிவைத்தே போராளிகள் இருவரும் காத்திருக்கின்றனர் என்பது அடுத்த சில நிமிடங்களில் தெரிந்துவிட்டது.

போராளிகள் எதிர்பார்த்ததுபோல், அவ்வீதிவழியால் அட்டகாசம் புரிந்தபடி அப்துல்லாவும் அவனது கூட்டாளியும் வந்தனர். காத்திருந்த போராளிகள் குறிதவறாமல் தாக்கினர். இருதரப்பினருக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை நடந்தது. ஈற்றில் கூலிக்குழு உறுப்பினர்கள் இருவரும் கொல்லப்பட்டனர். போராளிகளில் ஒருவர் காயமடைந்துவிட்டார்.

இந்தியப்படையினர் வருவார்கள் என்றுணர்ந்த போராளிகள் கோவிலுக்குள் சென்றனர். காயப்பட்ட போராளி அண்ணனிற்குப் பழக்கமானவர் என்பதால், அவருக்கு உதவி செய்வதில் எனது அண்ணன் ஆர்வம் காட்டினார். காயமடைந்த போராளியின் பாதுகாப்புக் கருதி, அவரை அழைத்துச் சென்று, சுவாமிமார்கள் உடைமாற்றும் அறைக்குள் விட்டுவிட்டு தனது வழமையான பணியில் ஈடுபட்டிருந்தார் அண்ணன். போராளிகளை பத்திரப்படுத்தி விட்டோம் என்ற மனநிறைவுடன் மீண்டும் [illegible] பயிற்சியில் ஈடுபட்டிருந்தார் அண்ணன்.

எதிர்பார்க்கப்பட்டதுபோல், கோபாவேசத்துடன் விரைந்தது இந்திய ஆக்கிரமிப்புப்படை. புழுதி கிளம்ப வந்து நின்ற நக்வண்டிகளில் இருந்து 'தொப்' 'தொப்' என்று குதித்தபடி தேவாலய வளவிலும், சுற்றுவட்டாரத்திலும் நிறைந்தது இந்தியப்படை. கோவிலுக்குள் புகுந்த இந்தியப்படையினர், எனது அண்ணனின் சட்டையில் இருந்த இரத்தக்கறையைக் கண்ணுற்றுவிட்டனர். போராளியைக் காப்பாற்றும் முயற்சியில் ஏற்பட்ட இரத்தக்கறை என்பதை விளக்குவதற்கு நேரம் இல்லை.

வந்தவேகத்தில் அண்ணனைச் சூழ்ந்து நின்று மோசமாகத் தாக்க ஆரம்பித்துவிட்டனர் இந்தியப்படையினர். புனித மரியாளை மன்றாடிக்கொண்டிருந்த மூதாட்டி ஒருவர், அந்த அப்பாவியை விடுங்கோடா என்று குரலெழுப்பியும் இந்தியப்படை கேட்பதாக இல்லை. மேலும் மேலும் தாக்குதல் தீவிரமடைந்தது. எனது அண்ணனால் பாதுகாப்பட்ட அப்போராளியை இந்தியப்படையினர் கண்டு பிடித்துவிட்டனர்.

அந்தப்போராளியைச் சூழ்ந்து நின்ற இந்தியப்படையினர், அருவருக்கத் தக்கமுறையில், பேடித்தனமான முறையில் அவர்மீது வேட்டுக்களைப் பொழிந்தனர். ஒரு நாயைச் சுடுவதுபோல... இல்லை... அதனிலும் மோசமாக இந்தியப்படை அந்தப்போராளியைச் சுட்டுக்கொன்றனர்.

எனது அண்ணனைப் பிடித்து, மோசமாகத் தாக்கிய இந்தியப்படையினர் கோவில் வளாகத்திலிருந்த சூழாம்மரத்தின் மீது பலவந்தமாக ஏற்றினர். அங்குதான் ஆயுதங்கள் மறைத்து வைத்திருக்கின்றாய் அதனை எடு என்று. அடித்துத் துன்புறுத்தி பலவந்தமாக ஏற்றிவிட்டு, அந்த மரத்தில் இருந்து தள்ளிவிட்டனர். அவலக்குரல் எழுப்பியபடி தரையில் வீழ்ந்து துடித்தான் என் அண்ணன். மண்டை உடைந்துவிட்டது. கைகால்கள் முறிந்துவிட்டன.

வீழ்ந்து கிடந்த அண்ணனைத் தூக்கி தரதரவென இழுத்தபடி வாகனத்தில் ஏற்றிய இந்தியப்படையினர், ஸ்ரேசனடி இராணுவ முகாமுக்குக் கொண்டு சென்றனர். அங்கும் வைத்து அண்ணன் இந்தியப்படையினரால் மோசமாகச் சித்திரவதை செய்யப்பட்டார்.

தனது அன்பு மகன் கைது செய்யப்பட்டதையும், சித்திரவதைக்கு உள்ளாகியிருப்பதையும் அறிந்து துடித்துப்போனார் நம் தாயார். அவலம் நிறைந்த அந்தப் பொழுதுகள் தற்போது நினைக்கையிலும் இரத்தக் கொதிப்பை ஏற்படுத்துபவை. அழுது குளறியபடி ஸ்ரேசனடி முகாமுக்குச் சென்றார் நமது அம்மா. அண்ணனைப் பார்த்துவிட வேண்டும் என்ற துடிப்பில், இந்தியப்படையதிகாரிகளை மன்றாடிக் கேட்டார். அந்த இராணுவ மிருகங்களுக்கு மனம் இரங்கவில்லை. மகனைப் பார்ப்பதற்குக்கூட தாயாருக்கு அனுமதி மறுத்தனர் இந்தியப்படையினர்.

என்றாலும், எனது தாயார் அண்ணனைப் பார்த்துவிட்டார். எப்படித் தெரியுமா? எனது தாயார் முகாமில் நின்றிருந்தசமயம், ஒரு இளைஞனை முகத்தை மூடியபடி இழுத்துக்கொண்டு சென்றனர் இந்தியப்படையினர்.

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

# தொடரும் வன்முறைகளும் திருந்தாத பேரினவாதமும்

சிங்களப் பௌத்த பேரினவாதிகளால் இலங்கைத்தீவில் வாழுகின்ற ஏனைய இனத்தினர் மீதான வன்முறைகள் திட்டமிட்ட வகையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த வகையிலேதான் கடந்த ஏப்ரல் 30ஆம் திகதி தொட்டு மே 4ஆம் திகதி வரையில் வடமேல் மாகாணத்தில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்கள் நடந்தேறியுள்ளன.

வடமேல் மாகாணத்தின் மாவனெல்ல நகரில் இரு இஸ்லாமிய மக்கள் கொல்லப்பட்டதோடு பெருந்தொகையானோரைக் காயப்படுத்தி, பாரிய உடமை அழிவுகளும் விளைவித்திட்ட இனவாதத் தாக்குதலானது சிறீலங்கா சிங்களவர்க்கே முதன்மையானது ஏனையவர்களுக்கு இதில் எவ்வித உரிமையும் இல்லை என்பதை மீண்டும் ஒரு தடவை இஸ்லாமியத் தமிழர்களுக்கு, சிங்களப் பௌத்த பேரினவாதத்தால் உணர்த்தப்பட்டுள்ளது. சிறீலங்காவின் பேரினவாத அரச ஊடகங்கள் பிரச்சாரப்படுத்துவது போல மாவனெல்ல விவகாரம் வெறுமனே தனிப்பட்ட தகராறு அல்ல.

தொழிற்றுறை அபிவிருத்தி அமைச்சர் மகி பாலஹேரத்தின் மெய்ப்பாதுகாவலர் மற்றும் அவருக்கு ஆதரவான சிங்களக் குண்டர்களாலேயே மாவனெல்ல நகரில் முஸ்லிம்கள் மீதான தாக்குதல் ஆரம்பித்து வைக்கப்பட்டது. ஏப்ரல் 30ஆம் திகதி அமைச்சர் மகி பாலவின் சகாக்கள் இரவு ஒன்பது மணியளவில் மாவனெல்ல பேருந்து தரிப்பிடத்திற்கு அண்மித்ததாகவுள்ள முஸ்லிம் இனத்தவருக்குச் சொந்தமான சாகிறா உணவகத்திற்குள் சென்று அதன் உரிமையாளரிடம் கப்பம் கோரியுள்ளனர். 'சிறீலங்கா ஒரு பல்லின சமூக நாடு, எவரும் எவருக்கும் கப்பம் கொடுக்கத் தேவையில்லை' என்ற நிலைப்பாட்டில் உணவக உரிமையாளர் கப்பம் கொடுக்க மறுத்துள்ளார். அமைச்சரின் ஆதரவாளர்களுக்கு வந்ததே கோபம். தமது ஆளுகையின் கீழுள்ள தீவில் வாழும் ஒரு இஸ்லாமியத் தமிழர் தமக்குக் கப்பம் தரமறுப்பதா என்று பேரினவாத மமதையில் அவரை இழுத்துச் சென்று மாவனெல்ல நகரின் மத்தியிலுள்ள பிரேமதாசாவின் சிலையின் கீழ் கட்டி வைத்துத் தாக்கியுள்ளனர்.



இது தொடர்பாக நீதி கேட்டுச் சென்ற முஸ்லிம் மக்களின் முறைப்பாட்டினைச் செவிமடுக்க மறுத்த சிங்களக் காவல்துறை, அம்மக்கள், அமைச்சர் மகி பாலவின் தீவிர ஆதரவாளரான பாலித தலைமையிலான சிங்களக் காடையர்களால் தாக்கப்பட்ட வேளையில் கைகட்டிக் கொண்டு நின்றதோடு முஸ்லிம் மக்களைத் தாக்கும்படியும் உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தது. சம்பவம் இடம்பெற்றதற்கு மறுநாளான செவ்வாய்க்கிழமை மே முதலாம் திகதி தொழிலாளர் தினத்தில் மாவனெல்ல நகரே தீப்பிடித்து எரிந்தது. பொலிசார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் கனிபா முகம்மது என்ற 55வயது இஸ்லாமியர் கொல்லப்பட்டார். பொலிஸ் கண்ணீர்ப் புகை, துப்பாக்கிச் சூடுகளோடு பாலித குழுவினர் பெற்றோல் குண்டுகளையும் முஸ்லிம் மக்கள் மீது பிரயோகித்தனர்.

செவ்வாய்க்கிழமை (01.05.2001) தொடர்ந்த கலவரத்தினைத் தடுத்து மாலை 6 மணி தொடக்கம் மறுநாள் புதன்கிழமை காலை 6 மணி வரைக்கும் ஒப்புக்கு சிறீலங்காக் காவல்துறை ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்தியது. முஸ்லிம் மக்களது கடைகள் மற்றும் ஏனைய உடைமைகள் மீதான தாக்குதல்கள் சிங்களக் காடையர்களினால் தங்குதடையின்றி மேற்கொள்ளப்பட்டன. மாவனெல்லையில் இஸ்லாமியர்களுக்குச் சொந்தமான 60 கடைகள் எரியூட்டப்பட்டன. இரு எரிபொருள் நிலையங்கள் எரியூட்டப்பட்டன. 50இற்கும் மேற்பட்ட வீடுகள் எரியூட்டப்பட்டன. உணவகங்கள் முற்றிலும் எரியூட்டப்பட்டன, சூறையாடப்பட்டன என முஸ்லிம் மக்களின் வர்த்தக நிலையங்களின் எண்ணிக்கை நூற்றுக்கு மேல் என தினக்குரல் பத்திரிகை தனது 03.05.2001 திகதிய பதிப்பில் குறிப்பிட்டுள்ளது. முஸ்லிம்களுக்குச் சொந்தமான இறப்பர் தொழிற்சாலையொன்றும் எரியூட்டப்பட்டது. கனேமுல்லையில் இஸ்லாமிய பெரியார் ஒருவர் சமாதி வைக்கப்பட்டிருந்த தர்கா உட்பட மூன்று பள்ளிவாசல்கள் சேதமாக்கப்பட்டன.

இவையெல்லாம் நடைபெற்ற பின்னர் சிறீலங்கா அரசாங்கத்தால் கண்துடைப்பு நோக்கில் அமைக்கப்பட்ட மதிப்பீட்டுக் குழுவின் மதிப்பீட்டின் பிரகாரம் முஸ்லிம்களின் சொத்திழப்பு 30 கோடி ரூபாய்களுக்கு மேல் என மதிப்பிடப்பட்டுள்ளது. சிறீலங்கா அரசாங்கத்தில் அமைச்சர்களாக, பிரதி அமைச்சர்களாக எல்லாவற்றிலும் மேலாக பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் பங்குதாரராக, முஸ்லிம் மக்களை பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கட்சியாக தன்னை வரித்துக் கொண்டுள்ள முஸ்லிம் காங்கிரஸ் இருந்தும் மாவனெல்ல வாழ் இஸ்லாமியர்களைக் காப்பாற்ற முடியவில்லை.

சிறீலங்கா சுதந்திரக்கட்சி அமைச்சராக பதவி வகிக்கும் அலவி மௌலானா தமது மக்களைக் காப்பாற்ற முடியாத நிலையில் சிங்களக் காவல்துறை மீது கடும் கண்டனத்தைத் தெரிவிக்கின்றார். 'சிறீலங்கா காவல்துறையினர் தமது கடமையை இதயசுத்தியோடு நீதி வழுவாது ஆற்றியிருந்தால் இத்தகைய இழப்பு ஏற்பட்டிருக்காது' என்கிறார் அவர். இதில் ஒன்றை அமைச்சர் அலவி மௌலானா மறந்துவிட்டார். தாம் அங்கம் வகிக்கும் அமைச்சரவையின் ஒரு சகாவான மகி பால

26.11.1988 அன்று ஞாயிறு காலை ஆதவன் முதலாய் உதயமாகாத நேரம் விடியற்காலை நான் துயிலெழுந்து, வழமை போல் சுத்தம் செய்து யாழ் புனித மரியன்னை பேராலயத்தில் முற்பலி ஒப்புக்கொடுக்க ஆயத்தமாகிக் கொண்டிருந்த நேரம் அறைக்கதவு அவலமாகத் தட்டப்படுகின்றது. பரிதாபமான அவலக் குரலொன்று 'சுவாமி, சக்கரியாசின் சடலம் பழைய பூங்கா வீதிச் சந்தியில் அனாதரவாக் கிடக்கின்றது' அந்தோ பரிதாபம் பால்முகம் மாறாக்காளை. அடியிருக்க ஆளில்லை என்றாற் போல் ஆகிவிட்டது. என்ன இது என் அங்கங்கள் பதறித்துடித்தன. அவன் அன்பு அன்னைக்கு எப்படி இதை எடுத்துச் சொல்வது.
எஸ். கிலறி ஜெயநேசன்
பங்குத்தந்தை யாழ் மரி அன்னை பேராலயம்

சித்திரவதையின் வலிதாங்கமுடியாது முனகியபடி சென்ற அந்த இளைஞன் யார் என்பது, அவனைப் பெற்றெடுத்த தாயாரால் இனங்காணுவது கஸ்டமாக இருக்கவில்லை.

தலை மூடப்பட்ட நிலையில், வேதனையுடன் முனகியபடி செல்வது தனது மகனே என தெரிந்த அம்மா, அழுது குழறினார். ஒருமுறையேனும் தனது மகனைப் பார்க்க அனுமதிக்குமாறு மன்றாடினார். ஆனால் பலனேதும் இல்லை.

இந்தக் கொடுமை எந்த ஒரு தாய்க்கும் ஏற்படக்கூடாது என, அந்தக் கொடுமையான நிகழ்வை இன்றும் நினைவு கூர்வார் எனது தாயார்.

பலரைச் சந்தித்தும் மகனைப் பார்க்கவோ மீட்கவோ முடியாத நிலையில், மனம் நோக உடல்வாடி வீட்டுக்கு வந்தார் அம்மா. எங்களுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. நாளை வருமாறு இந்தியப்படையதிகாரிகள் கூறிய வார்த்தையில் நம்பிக்கை வைப்பதைத் தவிர வேறு வழியில்லை. அன்றைய இரவு மோசமானது. மறுநாள் எப்போது விடியும் என்ற தவிப்பில் நிமிடங்கள் மெல்ல மெல்லக் கரைந்தன.

இரவு 11மணியிருக்கும் எமது வீட்டுக்கு அருகில் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டு அடங்கின. நெஞ்சமெல்லாம் பதைபதைப்பு. இனம்புரியாத ஏதோவொரு சுமை நெஞ்சில் அழுத்த செய்வதறியாது தவித்தோம். கெடுதலான காரியமேதும் நடந்துவிடுமோ என்று துடித்தோம்.

அப்படித்தான் நடந்துவிட்டது. இந்தியப்படையின் வெறிபிடித்த தோட்டாக்களின் இலக்கு, எனது அன்புக்குரிய அண்ணன்தான் என்பது காலைதான் தெரியவந்தது.

இரவு முழுக்க தூங்காது தவித்திருந்தோம். காலை, முகாம் சென்று அண்ணனைப் பார்ப்பதற்காக எனது தாயார் ஆயத்தம் செய்துகொண்டிருந்தார்.

அந்தச் சமயத்தில், வீட்டுக் கதவை யாரோ பரபரப்புடன் ஓங்கித் தட்டினர். என்ன ஏதோ என்ற தவிப்பில், கதவைத் திறந்த நமக்கு, மோசமான செய்தியே காத்திருந்தது.

நமது அயலவர் ஒருவர் பரபரப்புடன் எதிரே நின்றார்.

'உங்கள் மகனை சுட்டுவிட்டு, சந்தியிலே போட்டுவிட்டுச் சென்றுள்ளார்கள்'

இடிவிழுந்ததைப் போன்று துடித்தோம். ஆண்டவர் கருணைகாட்டவில்லை என்று புலம்பினோம். அன்புக்குரிய அண்ணனை, ஆசை மகனை இழந்த தவிப்பில் வீடு இருளடைந்துபோனது.

அழுது குளறியபடி, சந்தி நோக்கி ஓடினோம். ஏற்கெனவே ஊரார் அவ்விடத்தே திரண்டிருந்தனர். இரத்த வெள்ளத்தில் எனது அன்புக்குரிய அண்ணன். தலைவிரிகோலமாய், தலையிலடித்து ஒப்பாரி வைத்தபடி ஓடிச்சென்ற அம்மா, அண்ணனைத் தூக்கி மடியில் வைத்தார். இந்தியப்படையின் துப்பாக்கிச் சூட்டால் மண்டை பிளந்த நிலையில், மூளை வெளிவந்து என் தாயாரின் மடியில் வீழ்ந்தது. இந்தக் கொடுமையைச் சகிக்க முடியாது ஊரார் வாய்விட்டு அழுதேவிட்டனர்.

எல்லாம் முடிந்துவிட்டது. அண்ணனின் இறுதிச் சடங்குகளைக்கூட நம்மால் உரியபடி நடாத்த முடியவில்லை. அதற்கும் இந்திய ஆக்கிரமிப்புப்படை தடைவிதித்தது.

ஒரு அப்பாவி இளைஞனின் வாழ்க்கையை கேட்பார் யாருமின்றி, இந்திய ஆக்கிரமிப்புப் படை பறித்தெடுத்தது மாத்திரமின்றி, இறுதிச் சடங்கைக்கூட ஒழுங்காகச் செய்வதற்கு தடைவிதித்தது.

இந்திய ஆக்கிரமிப்புப்படையின் இந்த அநீதிகள், அடாவடித்தனங்கள், மக்களின் மனங்களில் தீயை மூட்டவே செய்தன.

அநீதியைப் புரியும் எந்த ஆக்கிரமிப்புப்படையும் அதன் விளைவுகளை எதிர்கொள்ளவேண்டும் என்பது விதி. அதுதான் நமது மண்ணிலும் நிகழ்ந்தது. அடக்குமுறையை ஏற்றுக்கொண்டு அடங்கிப் போய்விடாமல், எதிர்த்து நின்றது நமது மண்.

எமது மண்ணின் விடுதலை வரலாறு எழுதப்படும்போது, இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தின் கொடுமையான கறைபடிந்த வரலாறும் எழுதப்படும் என்பது தவிர்க்கமுடியாததே.

இந்திய ஆக்கிரமிப்புக் காலக்கொடுமையின் பதிவுகள், ஆயிரமாயிரமாய் எம்மண்ணில் விரிந்து கிடக்கின்றது. ■

# அண்ணனைப் பறிகொடுத்த தம்பியின் துன்பமான மனப்பதிவு

## ஆனையிறவுத் தாயின் தாலாட்டில் கதைகேளாய்!

சிரிப்பதா அழுவதாவென்
செல்லமே மடியில் உன்னை
இருத்தவா முத்தமிடவோ
இன்றுபோ இன்றுவென்று
கொடுக்கவா குழைத்து ஊறும்
குளிர்ந்த பால் கொண்டு தாகம்
தணிக்கவா கறுத்த மேகம்
சுரந்த வானேறும் நீரால்
சிலிக்கவுன் புழுதிமேனி
துடைக்கவா தூக்கித் தூக்கி!
நிறத்தவுன் மேனிப் புண்ணை
துடைத்துப்பின் துடைத்து இங்கே
பிறக்கவா புதிதாய் மீண்டும்
புவிப்பெண்ணே பூரிப்பு
அணைக்கவா உடம்பின் வேர்வை
ஆறிக்குள் இனிக்கும் தேனாய்ச்
சுவைக்கவா மகனே விம்மிச்
சிறவா அன்னை சேனை
பிடித்தவா நிருத்தோர் செல்வி
துணிந்த வென் விழுதைத் தூக்கி!
துடித்திடும் முலைநீர் சோர
தாக்கியென் நெஞ்சில் நானே
வெடிக்கவா! உயிர் வேர்வை
வீரமே சுமந்தாவென்று
துடிக்கவா தூங்கும் பிள்ளை
தன்னையென் மடியில் நானே
விதைக்கவா அறிவேனேதும்
விம்மலே தாலாட்டாக
வடிக்கிறேன் கொஞ்சம் ஆற
விழி மகள்
குளிப்பாய் பொன்னே!
புண்நிறத் தூறும் நீரால்
பூமுகம் களிக்கின்றாயே
கண்மணி தூங்கும் மட்டும்
கதையொன்று
கேளாய் நாளை
உன்மணிக் கொழும்புப்போது
உற்றவென்
கதைகள் உன்னைப்
பின்தொடர்ந்த் தசையும் தோளில்
புறப்படாய்
புகழை சேர்க்கும்
என்னுடைக் கொழுந்தே தாயன்
எடுத்த தாலாட்டுக் கேளாய்!

கொந்தே இவ் இளவன்செயலின் பின்னால் ஒழிந்துள்ளார் என்பதை. அமைச்சர் அலவி மௌலானா அங்கம் வகிக்கின்ற சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் பின்கதிரை பாராளுமன்ற உறுப்பினர்களால் கொண்டுவரப்பட்ட கௌஉறுப்பவே இன்றைய சிகல உறுமயவின் மூலம். இதனை அன்று தட்டிக் கேட்கமுடியாத இந்த அரசியல்வாதிகளால் ஒருபோதும் தமது இனத்து மக்களைக் காப்பாற்றமுடியாது. இதனையே மாவனெல்ல சம்பவங்கள் சுட்டிநிற்கின்றன.

மாவனெல்லயில் தமது சகோதரர் தாக்கப்பட்டது கண்டு பொங்கியெழுந்தனர் கொழும்பு வாழ் முஸ்லிம்கள். முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணியினது ஏற்பாட்டில் 04.05.2001 அன்று வெள்ளிக்கிழமை அறப்போராட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டது. கொழும்பில் இஸ்லாமியத் தமிழர்கள் ஆர்ப்பாட்டம் நடத்திய வேளையில் பெருந்தொகையான இராணுவமும், கலகத் தடுப்பு பொலிசாரும் குவிக்கப்பட்டனர். ஆனால் மாவனெல்லையில் முஸ்லிம்கள் தாக்கப்பட்டபோதும், அவர்களது உடமைகளும், கடைகளும் தீக்கிரையாக்கப்பட்ட வேளையில் பொலிசாரும் இராணுவமும் கைகட்டிப் பார்த்துக் கொண்டு நின்றனர்.

கொழும்பில் முஸ்லிம்கள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டங்கள் காரணமாக 5சிங்களப் பொலிசார் காயப்பட்டனர். இவ்வார்ப்பாட்டங்களின்போது இருபதிற்கும் மேற்பட்ட முஸ்லிம் மக்கள் காயமுற்றனர். வெள்ளி மாலை 6 மணிதொட்டு, சனி காலை 6 மணி வரைக்கும் 12 மணிநேர ஊரடங்குச் சட்டம் அமுல்ப்படுத்தப்பட்டது. மாவனெல்ல சம்பவத்திற்கு மன்னிப்புக் கேட்டு உரிய நடவடிக்கைகளை எடுக்க மறுத்த அரசு மாவனெல்ல சம்பவத்தை முஸ்லிம் மக்களுக்கெதிரான சிங்களப்பேரினவாதிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலாகக் காட்டாமல் வெறும் கோஸ்டி மோதலாகக் காட்ட முற்பட்டது. அம்மையாரின் அரசின் ஊதுகுழல் அமைச்சரான மகிந்த பிரிய தர்சன யாப்பா கோபத்துடன் சீறினார் 'கொழும்பில் பொலிசார் தாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றபோது அரசு சும்மா பார்த்துக் கொண்டிருக்க முடியாது' என்றார்.

கொழும்பின் மிகவும் பரபரப்பான வர்த்தக மையமான பஞ்சிகாவத்தை ஸ்தம்பிதம் அடைந்தது. கொட்டகென கொந்தளித்தது. மருதானை, புறக்கோட்டை என கொழும்பு எங்கணும் முஸ்லிம்கள் திரண்டு நின்று நீதி கேட்டனர். ஒரு கட்டத்தில் சிங்களக் காவல்துறையினால் ஆர்ப்பாட்டங்களைக் கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டது. கண்டி, வரக்காப்பொல, மாகோ பகுதியிலும் ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. மட்டக்களப்பு, அம்பாறை, புத்தளம் என பல்வேறு பகுதிகளிலும் நீதி கேட்டும், மாவனெல்லப் பகுதியில் இடம்பெற்ற சம்பவங்களைக் கண்டித்தும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் முஸ்லிம் மக்களால் நடத்தப்பட்டுள்ளன.

தமது பொம்மை அரசியல்வாதிகளால் முஸ்லிம் மக்களின் எழுச்சியைக் கட்டுப்படுத்த முடியாது எனக்கண்ட அம்மையார் உடனடியாகவே ஏதோ தாம் முஸ்லிம் மக்கள் மீது அக்கறை கொண்டவர் போல, இச்சம்பவம் தொடர்பாக ஆராய குழுவொன்றை நியமித்தார். இதில் உள்ள வேடிக்கையான பித்தலாட்டம் என்னவென்றால் அம்மையார் அமைத்த ஆணைக்குழுவின் தலைவராக பழுத்த பேரினவாதியும் இனத்துவேசமிக்கவருமான பிரதமர் ரட்ணசிறீ விக்கிரமநாயக்கா ஆகும். இதிலிருந்து முஸ்லிம் மக்களுக்கு கண்துடைப்பு நீதிகூட கிடையாது என்பதும் உறுதி ஆகிவிட்டது.


முஸ்லிம்களின் எழுச்சியை திரண்டு நின்று கருவறுக்கும் சிங்களப் படை.

முஸ்லிம்களின் மீதான தாக்குதல்கள் இன்று நேற்றல்ல ஒரு நூற்றாண்டு காலமாகவே சிங்களப் பேரினவாதிகளால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 1915இல் கண்டி, கம்பளைப் பகுதிகளில் முஸ்லிம் பள்ளிவாசல்கள் சிங்களப் பேரினவாதிகளால் தாக்கப்பட்ட காலத்திலிருந்து காலத்திற்குக் காலம் இஸ்லாமிய மக்கள் அடக்கப்பட்டு வந்துள்ளார்கள்.

1974 நவம்பர் 13இல் மகியங்கனைப் பகுதியிலுள்ள பஸ்கரகம எனும் முஸ்லிம் கிராமம் எரிக்கப்பட்டது. ஏழு முஸ்லிம்கள் புத்தளம் பள்ளிவாசலினுள் வைத்து பாதுகாப்புப் படையினரால் கொல்லப்பட்டனர். காலியில் முஸ்லிம்களுக்கு எதிராக பாதுகாப்புப் படைகளுடன் சிங்கள வெறியர்கள் தாக்குதல் நடத்தினர். இவை யாவும் சந்திரிகா அம்மையாரின் அம்மா சிறிமா அம்மையார் காலத்தில் இடம்பெற்றவை. 1983 கறுப்பு ஜூலை தமிழர்களுக்கு எதிராக மாத்திரமின்றி இஸ்லாமியர்களுக்கு எதிராகவும் சிங்கள வெறியர்களால் மேற்கொள்ளப்பட்டதாகும். 1983 டிசம்பர் 13ஆம் திகதி கண்டி மாவட்டத்தில் உள்ள முஸ்லிம் புனித அடக்கஸ்தலம் சிங்களக் காடையர்களால் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டது. அம்பாறை நெற்சோலை பள்ளிவாசல்க் காணி சிங்களவரின் கரப்பந்தாட்ட ஆடுகளம் ஆக்கப்பட்டது. தீகவாபி திராய்மடு பள்ளிவாசல் வெளத்த புனிதச் சின்னம் கண்டுபிடிக்கப் பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டு திருத்த அனுமதி மறுக்கப்பட்டது. இவையாவும் ஐ.தே.க காலத்தில் இடம்பெற்ற இஸ்லாமியத் தமிழர்களுக்கு எதிரான வன்முறைகளிற் சிலவே.

அம்மையாரின் காலத்தில் 18.02.1999 அன்று மத்திய மாகாணத்தில் தொரகம பகுதியில் முஸ்லிம்களின் இருபதிற்கும் மேலான வர்த்தக நிலையங்கள் அரசின் ஆசிபெற்ற ஐக்கிய சிங்கள வர்த்தகர்கள் சங்கத்தைச் சேர்ந்த குண்டர்களால் தாக்கப்பட்டன. இது மாத்திரமின்றி முஸ்லிம் மக்கள் மற்றும் தமிழர்களுக்கு கடைகள் வழங்கக்கூடாது என்று இனவாதத்தைச் சங்கம் சிங்கள மக்களை கடுமையாக வலியுறுத்தி வருகின்றது.

முஸ்லிம் மக்கள் தமது இருப்பைப் பேண உறுதியானதும் தெளிவானதுமான முடிவை எடுக்க வேண்டிய நிலையிலுள்ளனர். அவர்களுடைய அரசியல் தலைவர்களாகக் கூறிக்கொள்பவர்கள், தமது தனிப்பட்ட நலன்களைத் தவிர தமது சமுதாய நலன்களை கருத்தில் கொள்பவர்களாகத் தெரியவில்லை. ■

சமாதி

# கரும்புலி மேஜர் சிறிவாணி

அவள் அழுதுகொண்டு இருந்தாள்... மன துக்கம் அல்ல, அது ஒருபுறம் இருக்க சத்தமாக விக்கி விக்கி அழுதாள். அவளது அழுகைச் சத்தம் எங்கும் பரவியது. ஆனால், அவளது அழுகைக்கான காரணம் சிலருக்குத்தான் தெரிந்திருந்தது.

அந்த அழுகையில் ஏதோ ஒரு வேண்டுதல் இருந்தது. அவள் கலங்கும் விழிகளில் என்னவோ எதிர்பார்ப்பு நிறைந்திருந்தது.

அவளின் வேண்டுதலும் எதிர்பார்ப்புகளும் சாதாரணமானதாய் இருக்கவில்லை. தாக்குதலுக்குப் புறப்படுகின்ற அணியோடு தானும் தாக்குதலுக்குச் செல்ல வேண்டும். அதற்காகத்தான் அந்த அழுகை. இதை விட அவள் வேறு எதற்காகவும் கண் கலங்கியதில்லையே.

அவள் தன்னுடன் நிற்கின்ற அணிகள் செல்லும் சண்டைகள் அனைத்திற்கும் தானும் சென்றுவர வேண்டும். தன்னால் அதி உச்சமாய் தேசத்திற்கு எதைச் செய்ய முடியுமோ, அதைச் செய்துவிட வேண்டுமென்ற ஆவலும்தான் நிறைந்திருந்தது.

அந்த ஆவலும் சுறுசுறுப்பும் அவள் இயக்கத்தில் இணைந்த நாளில் இருந்து என்றும் குறைந்ததே இல்லை. அணிகள் வேவிற்காகவோ, அல்லது தாக்குதலுக்காகவோ புறப்படத் தயாராகின்றது என்றால் அவள் ஆவல் மேலெழ தானும் அந்தக் களங்களுக்குச் சென்றுவிட வேண்டுமென துடித்துக் கொண்டிருப்பாள். அவளின் இடைவெளி இல்லாத வேண்டுதலினால் பொறுப்பாளர் அவளிற்கு அந்தத் தாக்குதல் சந்தர்ப்பத்தைக் கொடுத்தால் அவளது முகம் அடுத்தகணமே எல்லையற்ற மகிழ்ச்சியால் மலரும். புன்னகை தவழும் முகத்தோடு மற்றவர்களிற்கும் சிரிப்பூட்டிக்கொண்டு, தானும் சிரித்து கலகலப்பாக இருப்பாள். இப்படி சண்டை ஒன்றிற்குச் செல்ல தர்க்கச் சண்டை செய்பவள்தான் சிறிவாணி.

அவள் அதிக உயரம் இல்லாத தோற்றம், சிரித்து எல்லாரோடும் பழகுகின்ற சுபாவம், மற்றவர்களைப் புரிந்துகொண்டு அவர்களோடு அன்பாய்ச் சண்டை செய்வது, அவர்களைக் கோபப்படுத்தி பின்பு அன்பு வார்த்தைகளால் நெகிழச்செய்து தாயாய் அரவணைக்கும் இயல்பு, அடிக்கடி ஏதாவது குறும்பு சொல்லி எல்லோரையுமே மகிழ்வாய் வைத்திருக்க வேண்டுமென்ற துடிப்பு எல்லாம் அவளிற்கு உரிய பண்புகள்.

சிரித்துக் கலகலப்பாய் அவள் திரிகின்றபோது, மனதில் சிறுதுளிக் கவலையும் இல்லாதவளைப்போல மற்றவர்களுக்குத் தெரிந்தாலும் அவளிற்கு மட்டுமே அடையாளம் தெரியும் சோகங்கள் எத்தனையோ...

அவள் வளரவிட்டு இயக்கத்திற்குப் புறப்பட்டுப் பத்து வருடங்கள் ஆகப்போகின்றன. இந்த நீண்ட கால இடைவெளியில் மீண்டும் ஒருதடவை அவள் நேசித்த உறவுகளையோ வீட்டார்களையோ பார்க்கமுடியவில்லை. இந்த ஏக்கம்தான் மனதுவிட்டு பின்னும் சூழ்ந்திருக்கும் கருமேகமாய் நினைவில் எங்கும் படர்ந்திருந்தது. என்ன செய்வது இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் அவளின் வீடும் உறவுகளும். விடுமுறையில் சென்றாலும் அவள் எப்படி அவளின் 'கருதாவளைக்' கிராமத்தைச் சென்றடைவாள், அங்கிருக்கும் உறவுகளோடு எப்படிக் கதைப்பாள். அது தானே பகலில் போராளிகள் நடமாட முடியாத இராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசமாயிருக்கின்றதே.

அம்மா அப்பாவைப் பார்க்கவேண்டும் அவர்களோடு பேசவேண்டும் என்ற மனக் குமுறலோடு, அவள் சிறு பிள்ளையாய் தூக்கி விளையாடி பாசம் கொட்டிவளர்த்த ஆசைத் தம்பியைப் பார்த்துவிட வேண்டும் என்ற நினைவுகளும் நெஞ்சில் பலமாக அடித்துக்கொண்டிருந்தன.

மனம் விம்மி வேதனையில் தவிக்கின்றபோது அவளிற்குள் எழுகின்ற எண்ணங்களை கடிதமாக்கி அப்பா அம்மாவிற்கு அனுப்பவும் முடியாது. அவள் அனுப்புகின்ற கடிதங்கள் இராணுவத்திடமோ அல்லது தேசத் துரோகிகளிடமோ அகப்பட்டுவிட்டால் வீடு எதிர்நோக்கும் அவல நிலையை நினைத்துக்கூடப் பார்க்கமுடியாது. அதனால்தான் மனச்சுமையைத் தனக்குள்ளேயே சுமந்தபடி மற்றவர்களுக்காக சிரித்தபடி வாழ்ந்துகொண்டு இருக்கிறாள்.

இராணுவங்கள் செய்யும் அநீதிகளுக்குப் பயந்து இப்படியெல்லாம் நடந்துவிட்டதே என்று நொந்துபோனாலும், வேதனையைத் தந்தவர்களையே வேரோடழித்துவிட நினைத்துக்கொண்டிருந்தாள் அந்த உன்னதமான போராளி.

'வண்டு' அவளை இப்படித்தான் செல்லமாக எல்லோரும் அழைத்துக் கொள்வார்கள். அது அவளிற்குப் பொருத்தமாக வைக்கப்பட்ட காரணப் பெயர். சின்ன உருவம், திரு திருவென விழித்தபடியும், சுறுசுறுப்பாக அங்கும் இங்கும் ஏதாவது ஒருவேலை செய்து கொண்டும், துடியாட்டமாய்த் திரிகின்ற அந்தக் குறும்புக் காரியின் செல்லப் பெயராக அது நிலைத்துவிட்டது. இப்போதெல்லாம் அவள் 'வண்டக்கா' என்றுதான் எல்லோருக்கும் அறிமுகம்.

எல்லாப் போராளிகளையும் தன் சொந்தங்கள் என நினைத்துக்கொள்ளும் அவள் சண்டையில் அல்லது மற்ற எந்தச் சூழ்நிலை என்றாலும் ஒவ்வொரு போராளிகளையும் அவதானமாகவும், அன்பாகவும் பார்த்துக் கொள்வாள். அவளின் வாழ்க்கை அதிகமாக வேவு நடவடிக்கைகளிலேயே கழிந்தது. வேவு எடுக்கின்ற நாட்களிலும் அவளின் துடியாட்டத்திற்கும், கலகலப்பிற்கும் குறைவே இல்லை.

இரவு வேவிற்குச் செல்வதற்கு முன் ஓய்வாக கிடைக்கின்ற சிறு நேரத்திற்குள்ளும் எதிரியின் பிரதேசத்திற்கு அருகில் இருக்கிற குளம் ஒன்றிற்குச் சென்று, தாமரைக் கிழங்கு தோண்டிக்கொண்டு வந்து அதைச் சுட்டு எல்லோருக்கும் கொடுத்து, சாப்பிட்டு மகிழ்வதில் அவளுக்கோர் திருப்தி. தாமரைக்கிழங்கிற்காகச் சென்றால் இராணுவத்தின் பதுங்கித்தாக்கும் அணியோ அல்லது வேவு அணியோ அவர்களைக் கண்டு தாக்கும் சந்தர்ப்பங்கள் இருந்தாலும், அதை மறைத்து அந்தக் கிழங்குகளை எடுத்துவந்து சாப்பிடுவது அவளிற்கு ஒரு சவால் போல விளையாட்டாகவே நினைத்து தோழிகளையும் அழைத்துக்கொண்டு மீண்டும் மீண்டும் அதையே செய்வாள்.

இருளே இல்லாத நிலவு நாட்களிலும், வேவிற்காக அவள் சென்றுவந்திருக்கிறாள். வேவு பார்ப்பது, பாதை எடுப்பது இப்படி எதுவென்றாலும் அவளும் அந்தப் பணிகளில் ஒருத்தியாக முன்னிற்பாள். சரியான துணிச்சல்காரி, எல்லாவற்றையும்விட அவளிற்குள் மேலே குமுறுகின்ற தேசப்பற்று, அதை விரைவாக வெளிக்காட்ட வேண்டுமென்கிற ஆர்வம், நினைத்ததை உறுதியாக செயற்படுத்தவேண்டுமென்கிற திட எண்ணம், எல்லாம்தான் அவளை அவளின் பக்கத்தில் வேகமாக்கிக் கொண்டிருக்கின்றது.

மட்டக்களப்பில் இருந்து தாக்குதல் அணிகள் யாழ்ப்பாணம் நோக்கி நகர்த்தப்பட்டபோது, இவள் வேவு அணியோடு இணைந்தே வந்திருந்தாள். மட்டக்களப்பின் காட்டுப் பாதைகள் வழி எம்-70 துப்பாக்கியை தோளிலே சுமந்தபடி அலைந்து திரிந்த அவளது பாதங்கள் பல களத்திலும் கலந்துகொண்டன. அவளின் கால்கள் யாழ் களமுனைகளிலும் நடந்தன. யாழ்ப்பாணத்தை வந்துசேர்ந்த ஆரம்ப நாட்களிலேயே அவள் கரும்புலியாக வேண்டுமென்ற தன் விருப்பத்தை தலைவருக்குத் தெரிவித்திருந்தாள்.

ஒருநாள்...

இவள் நின்ற முகாமிலே அணிகள் [illegible] சிறு பிள்ளைப் [illegible] அணியும் ஒன்றாக இருந்தது. 'வண்டு' அருகில் நிற்பவர்களிடம் இரகசியமாகக் கேட்டு, அவர்கள் எந்த அணியினரென அறிந்து கொண்டாள். அவர்கள்தான் கரும்புலி அணியைச் சேர்ந்தவர்கள் என்று அறிந்ததும் உடனேயே அந்த அணியோடு தானும் சேர்ந்துகொள்ள வேண்டுமென்று துடித்துக்கொண்டிருந்தாள். [illegible] ஆனால், அவளது வேண்டுதல்களை அப்போது யாரும் ஆதரிக்கவில்லை. [illegible] சண்டைகளில் முதிர்ச்சி பெறாத நிலை இப்படி எவ்வளவோ காரணங்களைக் கூறினாலும் அவள் கேட்பதாக இல்லை.

'கரும்புலியாய்ப் போய் நிறையச் சாதனைகள் செய்யவேண்டும்' இந்த உறுதியில் சிறிதும் தளராது இருந்தாள். அன்றில் இருந்து தலைவரின் அனுமதியைப் பெற்று [illegible] அவளின் கரும்புலிப் [illegible] பல களங்களிலும் [illegible].

அனைத்து ஆயுதங்களையும் [illegible]

'நான் எல்லாப் போர்களிலும் [illegible]

கரும்புலியாய் இணைந்து இலக்குத் தேடி அலைந்த நாட்களில் [illegible]

மிகநெருக்கமாக அமைக்கப்பட்டிருக்கும் [illegible] இராணுவ முன்னரங்கநிலைகளை [illegible]



| வீரப்பிறப்பு | வீரச்சாவு |
|---|---|
| 23 / 01 / 1975 | 05 / 07 / 2000 |


**கரும்புலி மேஜர் சிறிவாணி/வண்டு**

சின்னத்தம்பி சாந்தி
மட்டக்களப்பு

முல்லை மாவட்டத்தில் ஏற்பட்ட எதிர்பாராத வெடிவிபத்தின்போது வீரச்சாவைத் தழுவிக் கொண்டாள்.

பங்கு பற்றிய தாக்குதல்கள்-
[illegible]

கரும்புலியாகிய பின்-
[illegible]




ளோடே ஐந்தாறு நாளின் பசிப்பொழுதுகளைப் போக்கி, இராணுவ முகாமிற்குள்ளேயே இருந்து வேவுத் தகவல்களைத் திரட்டி மீளுகின்ற சிரமமான பணி அது.

சிறிவாணிக்கு அந்தப் பணியே நன்கு பிடித்திருந்தது. மண்ணிற்காக சுமந்துகொள்கின்ற ஒவ்வொரு துன்பங்களும் இன்பமானவைகள் தானே. சுமைகளை சுகமாக நினைத்தபின் சுமப்பது அவளிற்கு சிரமமானதாக இருக்கவில்லை.

அந்த ஆனையிறவின் வேவிற்காக அலைந்த நாட்களில் ஒருநாள் முன்னரங்குகளால் ஊடுருவி உள் நுழைந்தபோது எதிரி விழிப்படைந்துவிட்டான்.

அவர்கள் முன்னணி நிலைகளில் இருந்து, சில காலடித் தூரம் நடந்திருப்பார்கள், காவலரண்களில் இருந்து செறிவான சூடுகள் அவர்களை நோக்கிவந்தன. நிதானித்து எதிர்ச்சூடுகளை வழங்கி நிலைமைக்கு ஏற்றவாறு நிலையெடுத்துக்கொள்ள நேர அவகாசம் இருக்கவில்லை. எதிர்பாராத இந்தத் தாக்குதலினால் அணி நிலைகுலைந்து போயிருந்தது.

தாக்குதலிற்கு எதிர்ச்சூடுகளை வழங்கியபடி இவளும் இன்னும் இரு போராளிகளும் சற்றுத் தூரம் தள்ளி நிலையெடுத்திருந்தார்கள். அவர்களில் ஒரு தோழிக்கு காலில் ரவைபட்டிருந்தது. அவளால் காலை எடுத்து நடக்கவோ அசைக்கவோ முடியாதிருந்தது. பல தடவை முயற்சிசெய்து பார்த்தாள் அதுவும் பலன் அளிக்கவில்லை.

இந்தக் களச்சூழலில் அணியின் மற்றவர்களை தேடுவதற்கும் எதிரியின் நிலைகள் எங்கெங்கே இருக்கின்றன என்பதைக் கண்டறிவதற்கும் சிறிவாணி தனித்து ஒருத்தியாகவே செயற்படவேண்டியிருந்தது. எந்தவித தயக்கமும் இல்லாது கடும் சிக்கல் நிறைந்த இராணுவப் பிரதேசத்தினுள் தன் தேடுதலை நடத்தி இன்னுமொரு போராளியையும் கண்டுகொண்டாள்.

அதன் பின்னும், அங்கே நிற்பவர்கள் ஒவ்வொருவரது செயற்பாடும் மிக முக்கியமானதாய் இருந்தது. இராணுவப் பிரதேசத்தைக்கடந்து, விழுப்புண் பட்ட போராளியை கவனமாகக்கொண்டு சென்று சேர்க்கவேண்டும்.

ரவை பட்ட காயம் காலில் பெரிதான சிதைவை ஏற்படுத்தியிருந்தது. எலும்பை உடைத்து தசைகள் வெளியே தெரிய, ரத்தம் கசிந்துகொண்டிருக்கும் அந்தப் புண்ணுடன் எழுந்து நடக்கமுடியாது, தவழ்ந்து செல்வதென்றாலும் தவழ்கின்றபோது காயப்பட்ட அந்தக் காலை வெட்டில் கொடிகள் பிய்த்திழுக்கும், தடிக்குச்சிகளும் மண்ணும் காயத்தோடு உரசி வேதனையை இன்னும் அதிகமாக்கும். ஒவ்வொரு தடவையும் காயப்பட்ட அந்தப் போராளி தவழ்கின்றபோதும் அவளுடன் வரமறுக்கின்ற காலை கையால் இழுத்தபடி நகரும் அந்தப் போராளியின் நிலை வேதனையாய் இருந்தது.

சிறிவாணி அந்தப் போராளிக்காக தானும் அந்தப் போராளியைப் போலவே தவழ்ந்துவந்தாள், தோழியின் கால் சிக்குப்படுகின்ற நேரங்களில் அவற்றில் நோவேற்படாது, பக்குவமாகத் தூக்கிவிட்டபடி தொடர்ந்தாள். காயப்பட்ட போராளியின் ஆயுதமும் வேறு பொருட்களும் சேர்ந்து சிறிவாணிக்கு பாரம் அதிகமானாலும் அவள் மற்றவர்களிற்காக உதவுகின்ற செய்கையில் இருந்து தளரவில்லை. அந்த மணற்பிரதேசத்தில் அவ்வளவு பொருட்களோடும் காயப்பட்ட தோழிக்காகத் தவழ்ந்து வருவது அவ்வளவு சுலபமானதாக இருக்கவில்லை. பெருங்கடலுக்குள் இறங்கி நகரத் தொடங்கியபோது, இவளின் குறைந்த உயரம் இடையிடையே தண்ணீரில் மூழ்கி எழத்தான் செய்தது.

இரவிரவாக தண்ணீருக்குள்ளால் நகர்ந்து கரையை வந்தடைந்தபோது காயப்பட்ட போராளி நினைவிழந்து இருந்தாள்.

எல்லோரதும் விறைத்த உடலும் குளிர்காற்றில் நடுங்கிக்கொண்டிருந்தது. இன்னும் அவர்கள் போய்ச் சேர வேண்டிய தூரமோ அதிகமாய் இருந்தது. காயப்பட்ட போராளிக்கு முதலுதவி செய்யவேண்டும், நிலைமையை உடன் கட்டளைமையத்திற்குத் தெரியப்படுத்த வேண்டும். தொலைத்தொடர்பில் அறிவிப்பதற்கு தொலைத்தொடர்புச் சாதனம் தண்ணீர்பட்டதால் செயலற்றுப்போயிருந்தது. ஆனால், இன்னும் சிலமணித்துளிகளில் விரைவாகச் செயற்படாவிட்டால் சகதோழியின் நிலை ஆபத்தாகிவிடும் என்பதை அந்தச் சூழல் தெளிவுபடுத்திக்கொண்டிருந்தது.

இந்தத் தகவல்களைச் சொல்லி, உடனே முதலுதவிக்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு நீண்ட தூரம் பயணிக்கவேண்டியிருந்தது. இத்தனை உடற் சோர்வுகளோடும் சிறிவாணிதான் அந்த நீண்ட தூரத்தை விரைவாய் ஓடிச் சென்றடைந்து நிலைமையைச் சொல்லி மற்றவர்களையும் அழைத்துக்கொண்டு வந்து உரிய நேரத்தில் உதவினாள்.

இப்படி எந்த நேரத்திலும் சோராதவள் எவ்வளவு இறுக்கத்திலும் சளைக்காதவள், தேச விடுதலையென்ற ஒன்றையே மூலதனமாக்கி இயங்கிக்கொண்டிருப்பவள், மற்றவர்களின் துன்பங்களிற்காக வருந்துவதோடு மட்டுமல்லாமல் அவற்றின் காரணங்களைத் தீர்ப்பதற்கு உழைத்துக்கொண்டிருப்பவள். அதனால், தானே தனக்குள் எவ்வளவு வேதனைகள் இருந்தாலும் மற்றவர்களின் வேதனையை துன்பங்களைப் போக்குவதற்கு போரை விரைவாய் முடித்துவிட வேண்டுமென துடித்துக்கொண்டிருப்பாள்.

ஆனையிறவுக் களத்திற்கு அவளோடு களமாடச் சென்றவர்கள் திரும்பவில்லையே என்ற ஏக்கம் நெடுநாளாய் நெஞ்சுக்குள் உறங்காமல் இருந்தது.

அவர்களைப் பிரிந்து அவள் சாதனை புரிந்துவிட்டு வந்திருந்த நாட்களில் அவளின் முகத்தில் மலர்ச்சியே

**துளசிச்செல்வன்**

இருக்கவில்லை, சோகம் சூழ்ந்து வாடிப்போயிருக்கும். ஒவ்வொரு நாளும் காலையில் எழுந்து பூப் பறித்து வந்து மாலைதொடுத்து அவர்களுக்குச் சூட்டிய பின்னர்தான் வழமையான பயிற்சிப்பணிகளில் ஈடுபடுவாள்.

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

பலவர்ணப் பூக்களிலும் மாலை மிக அழகாகக் கட்டுவாள். தன் கூடவே இருக்கின்ற போராளிகளுக்கும் மாலை கட்டிப் பழக்குவாள். (இப்போது அவள் மாலை கட்டப் பழக்கிய தோழிகள் அவளின் திருவுருவப்படத்திற்கு மாலை சூட்டுகிறார்கள்.) அந்தத் தோழிகளின் நினைவிலேயே மூழ்கியிருப்பவள் நெஞ்சுக்குள் விடுதலைக் கனவின் கனதி இன்னும் அதிகமானது.

அவள் நினைத்துவந்த இலட்சியத்திற்காக உழைக்கவேண்டும், கூடவே அவளோடு களமாடிப் போனவர்களின் விடுதலைக் கனவையும் சுமக்கவேண்டும், அதற்காகத்தான் ஒவ்வொரு சண்டைகளிலும் தவறாது பங்கெடுத்துவிட வேண்டும் எனக்கேட்டுக் கொள்வாள்.

சிறிவாணி கரும்புலிகள் அணியில் இணைந்து கொள்வதற்கு முன்னும் கரும்புலிகள் அணியில் சேர்ந்து செயற்படத் தொடங்கிய நாட்களிலும் அவள் பல சண்டைகளில், ஏராளமான வேவு நடவடிக்கைகளிலும் பங்குபற்றியுள்ளாள்.

அவள் கரும்புலியாகக் கலந்துகொண்ட இறுதித் தாக்குதல் பளை ஆட்லறித்தளங்கள் மீதான கரும்புலித் தாக்குதலாகும்.

பதினொரு ஆட்லறிகளைத் தகர்த்து, புதியதொரு பரிமாணத்தை ஓயாத அலைகள் மூன்று காலப் பகுதியில் ஏற்படுத்திய கரும்புலிகள் அணியில் சிறிவாணியும்- அவள் அந்தத் தாக்குதலுக்கு 'லோ' வோடுதான் சென்றிருந்தாள்.

அணிகள் வேகமாக அந்தத் தளப்பிரதேசத்திற்குள் நுழைவதற்கு இவளின் இலக்குத்தவறாத சூடு மிகமுக்கியமானது. கரும்புலி மேஜர். சுதாஜினி வீரச்சாவடைய, அந்தக் களத்தில் அவளது பணியை இவளே ஏற்றுத் தொடர்ந்தாள். முதல் பெண் தரைக் கரும்புலி வீரச்சாவடைந்த தாண்டிக்குளச் சண்டை தொடக்கம் கரும்புலிகள் அணி கலந்துகொண்ட அதிகமான தாக்குதல்களில் இவளும் பங்கெடுத்திருக்கிறாள். ஆனால், இந்தக் களத்தில்தான் களம் ஏற்படுத்திய வீரவடுவாக கனத்தின் வெடியதிர்வுகள் பாரிய உடற்தாக்கத்தை விளைவித்திருந்தது. காதுகளிற்குள்ளிருந்து இரத்தம் கசிந்துகொண்டிருந்தது. இவற்றையெல்லாம் பொருட்படுத்தாது சிறிவாணி தொடர்ந்தும் தன்பணிகளில் விரைவானபடியே இருந்தாள்.

தனது இருபத்திரண்டு வருட வாழ்க்கையில் பத்துவருட வாழ்க்கையை போராட்டத்தில் கழித்தவள். அவளிற்கு இந்தக் களச்சூழல் புதிதானதாக இருக்கவில்லை. களத்தில் ஒவ்வொரு அங்குலத்தையும் நுட்பமாக அறிந்து வைத்திருந்தாள். ஒவ்வொரு களங்களிலும் அவள் சென்று வருகின்றபோது வீரத்தின் புதிய அத்தியாயம் ஒன்றை திறந்துவிட்டே வந்தாள்.

அவளது களவாழ்க்கையில் ஐந்து வருடங்களை கரும்புலியாய் கடந்தவள். நீண்ட நாட்களாக அவளின் (கரும்புலிக்கான) இலக்கிற்கான காத்திருப்பு, அதற்காக அவள் பெற்றுக்கொண்டிருந்த கடுமையான பயிற்சிகள் எல்லாமே அவளிற்குள் இருந்த வைரமான உறுதியை வெளிக்காட்டின.

'நிறையச் செய்யவேணும், தேசம் எதிர்பார்ப்பதுபோல சாதிக்கவேணும் அதற்குப் பிறகுதான் கதைக்கவேணும்'

இதுதான் அவள் தனது அடக்கமான வீரத்திற்குக் கூறுகின்ற முன்னுரைகள். அவள் தன்னைப் பற்றி, தான் சென்ற தாக்குதல்கள் பற்றி யாரோடும் பேசியதில்லை. தன்கூட இருந்தவர்களைப் பற்றியே எப்போதும் பேசிக்கொள்வாள்.

ஓயாமல் வீசிக்கொண்டிருந்த இந்தப் புயல் ஓய்ந்துவிடப் போகின்றதை யாருமே எதிர்பார்த்திராத அந்த நாள்.

வழமைபோல் முகமலர்ச்சியோடு கறுப்பு வரிச் சீருடையோடு எல்லாத் தோழிகளுடனும் சிரித்துக் கலகலத்தபடி இருக்கிறாள். 05-07-2000 அன்று கரும்புலிகள் நாளல்லவா. கூட இருந்தவர்களை நினைத்து வணக்கம் செய்வதற்காய் அந்த மைதானத்தில் கூடியிருந்தார்கள். நிகழ்வோடு ஒன்றிப்போய் எல்லோரையும் போலவே அவளும் மெய்சிலிர்த்துப்போயிருந்தாள்.

அந்தக் கணத்தில்தான் எதிர்பாராத விபத்து அங்கே நிகழ்ந்துவிடுகின்றது.

சாதாரண காயம் என்றுதான் முதலில் எல்லோரும் நினைத்தார்கள். ஆனால், அவளிற்குத் தெரியும் நெஞ்சில் ஆழமாய் பதிந்துவிட்ட காயம் என்று. தன் சாவின் விளிம்பைத் தெரிந்துகொண்டும் சாதிக்கத் துடிக்கின்ற கரும்புலியல்லவா அவள். சாவு நெருங்கிவிட்டது. அவள் நினைத்ததுபோல களத்தில் சாதிக்கவில்லையே, களத்திலே தன்சாவு வரவில்லையே என்ற ஏக்கம்போல முகத்தில் வாட்டமாக இருந்தது.

விழிகள் எதையோ ஆர்வமாகத் தேடின. அவள் அருகில் நின்ற தோழியிடம் சத்தமற்ற குரலில் 'அண்ணாட்ட சொல்லுங்கோ நான் பொசிசன் எடுத்துக் கிடந்துதான் காயப்பட்டனான்'என்று அந்த இறுதிக் களத்திலும் தலைவரிற்கு இறுதியாக இந்தச் செய்தியைத்தான் சொல்லிவிட்டாள்.

காயப்பட்டதிலிருந்து அவள் மூச்சு வாழ்ந்த ஒரு சில மணிநேரத்திற்குள் அவள் திரும்பத் திரும்ப உச்சரித்த வார்த்தைகள் இரண்டு. ஒன்று, அவள் இதயம் முழுவதும் சுமக்கின்ற தலைவனை, மற்றது அவள் பார்க்கத் தவித்த ஆசைத் தம்பியை.

தேசத்தின் வடிவாய் தலைவனை நினைத்தாள். தலைவனின் முகத்தில் தேசத்தைப் பார்த்தாள். தேசத்தின் சூரியக் குழந்தைகளில் நட்சத்திரமானாள். ■

# "எதிரியின் ஆக்கிரமிப்பை முறியடிக்க நாம் அனைவரும் ஒன்றிணைந்து, எம்மைத் தயார்ப்படுத்திக்கொள்ள வேண்டும்"

## தீச்சுவாலையை வெற்றி கொண்ட படையணிகளைப் பாராட்டி கௌரவிக்க விழாவில் தேசியத் தலைவர்

தீச்சுவாலை-1 என்ற சிறீலங்கா இராணுவத்தின் படை நடவடிக்கைக்கு எதிரான முறியடிப்புச் சமரில் சிறப்பாகச் செயற்பட்ட தளபதிகள், போராளிகள் ஆகியோருக்கு தமிழீழத் தேசியத் தலைவரவர்களால் தேசிய விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

06.05.2001 அன்று மாலை வன்னியில் சிறப்பாக ஒழுங்குபடுத்தப்பட்ட நிகழ்வில் தீச்சுவாலை-1 இராணுவ நடவடிக்கையின் போது அதனை எதிர்த்து முறியடிப்புச் சமரை வழிநடத்திய தளபதிகளும்- சமரில் பங்கு கொண்ட போராளிகளும் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். சோதியா படையணியைச் சிறப்பாக வழிநடத்திய லெப்.கேணல் துர்க்கா அவர்களுக்கு கேணல் நிலை வழங்கப்பட்டு கௌரவ விருதும் வழங்கப்பட்டது. சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியை சிறப்பாக வழிநடத்தி சிறப்பாகச் செயற்பட்ட மேஜர் கோபித்திற்கு லெப்.கேணல் நிலை வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

அத்தோடு அனைத்துப் படையணிகளையும் சேர்ந்த தளபதிகள், போராளிகள் ஏனைய விநியோகப் பிரிவு, மருத்துவப் பிரிவு, வாகனப்பகுதியில் சிறப்பாகச் செயற்பட்டோருக்கும், எல்லைப்படையினரை சிறப்பாக வழிநடத்திய போராளிகளுக்கும் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. இம்முறியடிப்புச் சமரில் மிகத்துல்லியமாகத் தாக்குதலை மேற்கொண்டு சிறப்பாகச் செயற்பட்ட மோட்டார், ஆட்லறிப் படையணியினரும் சிறப்பாகப் பாராட்டப்பட்டனர்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய தேசியத் தலைவர் அவர்கள், எமது மண்ணை ஆக்கிரமிக்க முயன்ற சிங்கள இராணுவத்தினரை எதிர்த்து, வீரத்துடனும் நெஞ்சுறுதியுடனும் களமாடி, எதிரிக்கு பேரிழப்பை ஏற்படுத்திய புலிப்படை வீரர்களை வெகுவாகப் பாராட்டினார்.

"பெரும் உயிர்ச்சேதத்தாலும், தோல்வியாலும் அவமானப்பட்டு நிற்கும் எதிரியானவன் தனது ஆக்கிரமிப்பு நடவடிக்கையை மீண்டும் மீண்டும் மிகவும் மூர்க்கத்தனமாக முன்னெடுக்க முயற்சிப்பான். எனவே நாம் மிகவும் விழிப்புடனிருந்து, எதிரியின் ஆக்கிரமிப்பை முறியடிக்க நாம் அனைவரும் ஒன்றிணைந்து, எம்மைத் தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும். எமது மண்ணையும் எமது மக்களையும் பாதுகாத்து தேச விடுதலை என்ற இலட்சியம் நோக்கி நாம் உறுதி தளராது செயற்படுவோம்"

இவ்வாறு தேசியத் தலைவர் அவர்கள் தெரிவித்தார்.



கேணல் துர்க்கா



## உலகத் தொழிலாளர் தினத்தில் தமிழீழ மக்கள் 01.05.2001

**01.05.2001 அன்று நடந்து முடிந்த மேதின எழுச்சிப் பேரணிகளில் உலகத் தொழிலாளர் வர்க்கத்துடன், தமிழீழ மக்களும் கைகோர்த்து, தமது உறுதிப்பாட்டையும், ஒற்றுமையையும் வெளிப்படுத்தியதுடன் சிங்களப்படையின் ஆக்கிரமிப்பிற்கு உள்ளாகியிருக்கும், தமிழீழ மண்ணில் நிகழும் கொடுமைகளை உலகறியும் வண்ணம் செய்தனர்.**

**பிரான்சின்** தலைநகர் பாரிசில் நடைபெற்ற மே தினப் பேரணியில் 2000ற்கும் அதிகமான பிரான்ஸ் வாழ் தமிழ் மக்கள் கலந்து கொண்டனர்.

**ஜேர்மனியில்** பிராங்பேட், கம்பேர்க், டுசில்டோவ் ஆகிய மூன்று நகரங்களில் ஏனைய தொழிற்சங்கங்களுடன் இணைந்து தமிழர் சுயநிர்ணய உரிமைக்கான ஒருமைப்பாட்டுக் குழு பேரணிகளை ஒழுங்கு செய்திருந்தது. இப்பேரணிகளில் பெருமளவிலான மக்கள் கலந்து கொண்டனர்.

**சுவிற்சர்லாந்தில்** சூரிச், ஜெனிவா, பிறீபேக் ஆகிய நகரங்களில் சுவிஸ் தமிழ் அமைப்புக்களின் கூட்டமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த எழுச்சிப் பேரணிகளில் பெருந்தொகையான சுவிஸ் வாழ் தமிழ் மக்கள் கலந்து கொண்டனர்.

**நோர்வேயின்** தலைநகர் ஒஸ்லோவில் நடைபெற்ற மேதினப் பேரணியில் ஐநூறிற்கும் அதிகமான தமிழீழ மக்கள் கலந்து கொண்டனர்

தமிழீழ ஆவணச் சுவடகம் Tamileelam Archive



பிரான்ஸ்



ஜேர்மனி



சுவிஸ்






நோர்வே

## இரண்டு கவிதைகளும் இன்னொன்றும்

செல்களின் தாலாட்டில் கண்ணயரும் புலிவீரர்
கற்பனையில் கவிதை வரும்,
கண்ணயர முடியாமல் கள வீரர் நினைவு வரும்
விழியோரம் கசிவு வரும்.

ஒவ்வொரு காலையும் கற்பனையாய் விரிகிறது
காலைச் சூரியனாய்
ஈழம் கண்முன்னே விரிகிறது
பொன்னான தமிழீழம் போர் முடிந்த வீரர்களின்
உதிரத்தில் மிலக்கிறது
வாருங்கள் தமிழீழம் விரைவினில் வென்றெடுப்போம்.

மலர்கின்ற தமிழீழம் எங்களது பெயர் சொல்லும்
மாவீரர் நினைவாலே உணர்வு வெள்ளம் பெருக்கெடுக்கும்
போர் தொடுத்த களங்களெல்லாம்
போர் முடிந்த கதை சொல்லும், வேரறுந்த மரங்களாய் மக்கள்
ஊர் பிரிந்த கதை சொல்லும்
ஒன்றாகப் பத்தாக மக்களெல்லாம்
புலிகளுடன் ஒன்றிணைந்த கதை சொல்லும்.

**மேஜர் அஜந்தா**

(மாலதி பொன்னம்பலம், யாழ்) 2000.04.01 இல் இயக்கச்சியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரச்சாவடைந்தார். அவரது குறிப்பேட்டிலிருந்து இக்கவிதை தரப்படுகின்றது.



# நெருப்புப் பழம்

நெருப்புப் பழம் ஒன்று
நெஞ்சில் கனிகிறது...!
அன்னைத் தமிழ் ஈழம்
எந்தன் உயிர்த்தாயகம்
தன்னை எவன் தொட்டான்
தமிழா எழுக! என
மின்னை இடியை
புயலைத் தமிழ்செய்தேன்...
என்னைக் கொடுங்கவிஞன்
என்றார் சிறையிட்டார்...

நெருப்புப்பழம் ஒன்று
நெஞ்சில் கனிகிறது!...
ஓங்கு நெடுமதில்கள்
உள்ளே இருட்கோலம்
தாங்க முடியா நோய்
தாகம் பசிக்கொடுமை
தீங்கு படைக்கும்
கொடியர் சிறைக்கோட்டம்
ஏங்கி ஒருதமிழன்
இங்கு மடிகின்றேன்...

நெருப்புப்பழம் ஒன்று
நெஞ்சில் கனிகிறது...!
என்னை இல்லையம்!
எனைப்போல் ஒரு மனிதன்
மன்னனாய் இங்கே
வளர்ந்துபோன அம்மனிதன்
சொன்னபடி கைகள்
கட்டித் தொழும்பேற்றும்
பொன்னைப் பயமேனோ...
போதும்! இது போதும்!

நெருப்புப் பழம் ஒன்று
நெஞ்சில் கனிகிறது!
வானில் கிளி பறக்கும்...
வண்ணக் கொடிமுல்லை
தான் நினைத்த பக்கம்
தழுவிப் படர்ந்திருக்கும்
மாநிலத்தே யான்
அட! இம் மதில் நடுவில்
ஏனிப்படி இருந்தேன்
என்ன பிழை செய்தேன்?

நெருப்புப் பழம் ஒன்று
நெஞ்சில் கனிகிறது...!
பட்டு நிலா வான்
மிசை எழப் பாரெங்கும்
கொட்டு முழவிசையில்
கூத்தாட வையத்தின்
எட்டுத் திசையும்
மகிழத் தமிழன்பான்
மட்டும் துயர் தாங்கி
மாளப் பிறந்தேனோ!

நெருப்புப் பழம் ஒன்று
நெஞ்சில் கனிகிறது!
"நானோ அடிமை"
என நா விளிக்கிறது!
கூனோ குறுக்கும்
உடலம் கொதிக்கிறது!
தேனோ மரணம்
என் நெஞ்சொலிக்கிறது!
ஏனோ விழியில்
இரத்தம் பனிக்கிறது

நெருப்புப் பழம் ஒன்று
நெஞ்சில் கனிகிறது!

**கவிஞர் காசி ஆனந்தன்**

களத்தில்

ஈழத் தமிழர்கள் தனித்துவமான இன அடையாளத்தைக் கொண்டவர்கள், ஒரு தேசிய இனக் கட்டமைப்போடு அந்த இனத்துவ பிரக்ஞையோடு வாழும் ஒரு சமூகம். அவர்களுக்கு வரலாற்றுரீதியிலான தாயக மண்ணாக சொந்த நிலமுண்டு. எமது மக்கள் விரும்புவதெல்லாம் ஒன்றுதான். தமது சொந்த மண்ணில் நிம்மதியாக, நிறைவாக வாழ வேண்டும் என்பதுதான்.



**தமிழீழத் தேசியத் தலைவர்**
**மேதகு வே.பிரபாகரன் அவர்கள்**

17-05-2001 தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் செய்தித்தாள் (234)

# அக்னி கீல படுதோல்வியும் வழிக்குவரும் சந்திரிகாவும்(?)

மே மாதம் ஒன்பதாம் திகதி, நோர்வேயின் சிறப்புத் தூதுவர் திரு. எரிக் சுல்கைம் அவர்கள், லண்டனில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் அவர்களைச் சந்தித்துப் பேச்சுவார்த்தையை நடாத்தியிருந்தார். திரு. சுல்கைம் அவர்கள் மே மாதம் 1ம், 2ம் திகதிகளில், சிறீலங்கா சனாதிபதி சந்திரிகா, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா ஆகியோருடன் தான் நடத்திய பேச்சுவார்த்தையின் விபரங்களை, திரு. அன்ரன் பாலசிங்கம் அவர்களிடம் எடுத்து விளக்கியதுடன், புதிய சமரசத் திட்டம் ஒன்றையும் கையளித்தார்.

அக்னி கீல இராணுவ நடவடிக்கை ஆரம்பிப்பதற்கு முன்னால் இருந்த சிறீலங்காவின் திமிர்த்தனமான போக்கு, அக்னி கீலவின் அவமானகரமான தோல்வியையடுத்து தணிந்திருப்பது தற்போது உணரப்படுகின்ற நிலையில், நோர்வே அரசு புதிய சமரசத் திட்டம் ஒன்றை விடுதலைப் புலிகளிடம் கையளித்திருக்கின்றது.

**'இது ஒரு ஆக்கபூர்வமான யோசனை. இதுபற்றி நாம் மேலும் விரிவாகப் பேச வேண்டும்'** என விடுதலைப் புலிகள் இது குறித்து அபிப்பிராயம் தெரிவித்திருக்கின்றனர்.

சிறீலங்கா அரசின் பொறுப்பற்ற போக்காலும், அதன் இராணுவவாதக் கடும் கோட்பாட்டாலும் ஸ்தம்பிதமடைந்திருந்த, நோர்வேயின் சமாதான முயற்சிகளுக்கு மீண்டும் புத்துயிர் கொடுக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அதன் தொடர்ச்சியாக மே மாதம் 15ம் திகதி, மீண்டும் கொழும்பு சென்றிருந்தார் நோர்வேயின் சிறப்புத் தூதுவர் திரு. எரிக் சுல்கைம் அவர்கள். சிறீலங்கா சனாதிபதி சந்திரிகாவுடனும், வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமருடனும், புரிந்துணர்வு உடன்பாடு குறித்த முக்கிய பேச்சுக்களை நடாத்தியுள்ள திரு. சுல்கைம் அவர்கள், வன்னி சென்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பிரமுகர்களைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தத் திட்டமிட்டிருந்தார். சிறீலங்காவிற்கான நோர்வேத் தூதுவர் திரு. ஜோன் வெஸ்பேர்க், நோர்வே வெளிவிவகார அமைச்சகத்தைச் சேர்ந்த செல்வி. கோள்ஸ்டி ஆகியோருடன் வன்னி செல்லும் நோர்வேயின் சிறப்புத் தூதுவர் திரு. எரிக் சுல்கைம் அவர்கள், விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. சு.ப. தமிழ்ச்செல்வன் மற்றும் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பிரமுகர்களுடன் மல்லாவியில் நடாத்தும் பேச்சுவார்த்தைகள் முக்கியமானதாக எதிர்பார்க்கப்படுகின்றது.




தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

அக்னி கீலவின் அவமானகரமான தோல்வியும், சகித்துக்கொள்ளமுடியாத பெரும் இழப்பும், பேச்சுவார்த்தைக்கு முன்னதான இராணுவ வெற்றியொன்றின் கனவை தவிடுபொடியாக்கியிருக்கின்றது. இந்நிலையில், விடுதலைப் புலிகள் பாரிய தாக்குதல் ஒன்றைத் தொடுப்பின் அதனை எதிர்கொள்ள முடியாத வலுவிழந்த நிலையிலேயே சிங்களப்படையினர் உள்ளனர் என்பதும் வெளிப்படை. பல்குழல் எறிகணை செலுத்திகள், போர் விமானங்கள் என வாங்கிக் குவிக்கப்பட்ட புதிய போர்த்தளபாடங்கள் தந்த கற்பனைத் தென்பும், சுக்குநூறாக உடைந்துபோய்க் கிடக்கின்றது. விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் பாரிய படையெடுப்பை மேற்கொள்வது தற்போதைக்கு இயலாத காரியம் என, படைத்தலைமையும் கைவிரித்துள்ளது.

இத்துடன், வெளிநாடுகளின் அதிகரித்து வரும் அழுத்தங்களும், சந்திரிகா அரசை வழிக்குவர வைத்திருக்கின்றது என்றே கருத இடமுண்டு. **'போர்நிறுத்தத்திற்கான தனது இணக்கத்தை சந்திரிகா அம்மையார் திரு. சுல்கைம் அவர்களுக்கூடாக எம்மிடம் தெரியப்படுத்தியுள்ளார்'** என்று தெரிவித்திருக்கின்றார் திரு. அன்ரன் பாலசிங்கம் அவர்கள். இது, சமாதானப் பேச்சுவார்த்தைக்கு முன்னோடியாக சமாதான நல்லெண்ண புறநிலையை உருவாக்கும் புரிந்துணர்வு உடன்பாட்டுக்கு வழிவகுக்கும் நம்பிக்கைகளை ஏற்படுத்தியிருக்கின்றது.

இவ்வாறு கொழும்பிலும், வன்னியிலும் நோர்வே இராஜதந்திரிகள் நடாத்தும் பேச்சுவார்த்தையின் விளைவுகளை, அடுத்த சில தினங்களில் எதிர்பார்க்கலாம். சிறீலங்கா அரசு, தனது முன்னைய கடும்போக்கைக் கைவிட்டு, யதார்த்தத்தை தெளிவாகப் புரிந்துகொண்டு, சமாதானப் பாதைக்கு வர முழுமையாகச் சம்மதிக்கும் பட்சத்தில், புரிந்துணர்வு உடன்பாட்டுக்கான சாத்தியக் கூறுகள் அதிகம் என்றே கருத இடமுண்டு.

புரிந்துணர்வு உடன்பாட்டை ஏற்படுத்துவதற்கே பெரும்பாடுபட வேண்டியிருப்பதை உணரும் நோர்வே அரசு, இருதரப்பையும் பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டுவருவதிலும், இனப்பிரச்சினைக்கு தீர்வொன்றைக் காண்பதிலும் இருக்கக் கூடிய சவால்களை உணரும் என்பது தெளிவானது.

சிறீலங்கா அரசை வழிக்குக் கொண்டுவருவதற்கு, இராணுவ ரீதியாகவும், அரசியல் இராஜதந்திர தளங்களிலும் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட வேண்டும் என்பதே, அக்னி கீலவும் அதன் பின்னரான சிறீலங்கா அரசின் நடவடிக்கைகளும் நமக்குப் புலப்படுத்துகின்ற உண்மைகள் ஆகும். ●

## சமாதானத்தின் முயற்சிக்கு அச்சுறுத்தல்!

16.05.01 அன்று, வன்னிக்குச் சென்றிருந்த சிறப்புத் தூதுவர் திரு. எரிக் சுல்கைம் உள்ளிட்ட நோர்வே இராஜதந்திரிகளை மல்லாவியில் சந்திக்கும் ஏற்பாட்டுடன் விடுதலைப் புலிகளின் சமாதானக் குழு, பிரதான நெடுஞ்சாலை வழியாகச் சென்று கொண்டிருந்த சமயம் அவர்களின் வாகனத் தொடரணியை இலக்கு வைத்து கொக்காவில் பகுதியை ஊடுருவிய சிறீலங்கா நாசகாரப் படையினர் சக்தி வாய்ந்த கிளைமோர்த் தாக்குதலை நடத்தியுள்ளனர். இத் தாக்குதலில் சமாதானக்குழுவிற்கு பாதுகாப்பை வழங்கிக் கொண்டிருந்த பஜிரோ வாகனம் முற்றாகச் சேதமாகியுள்ளது.

இதில் பயணம் செய்த போராளிகளில் ஒருவர் வீரச்சாவைத் தழுவிக்கொண்டார். இருவர் காயங்களுக்கு உள்ளானார்கள். முக்கிய உறுப்பினர்கள் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளார்கள். இத்தாக்குதலை அடுத்து, நோர்வே இராசதந்திரிகளின் வன்னிப் பயணம் காலதாமதமாகியுள்ளது.

பெப்ரவரி 18ஆம் திகதி மடு சென்ற சர்வமதத் தூதுக்குழுவினரைச் சந்திக்கச் சென்ற விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்களைக் குறிவைத்து பாலமடுப் பகுதியில் சிங்களப் படையினர் ஊடுருவித் தாக்குதல் நடத்தியதும் விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் மயிரிழையில் உயிர் தப்பியதும் இங்கு நினைவுகூரத்தக்கது. ■



நீர்கவாலை முறியடிப்புச் சமரின் ஒருங்கிணைப்புத் தளபதி கேணல் தீபன் விளக்குகின்றார்.

7



"புரிந்துணர்வு உடன்பாட்டு விவகாரத்திலேயே இன்னும் இணக்கம் ஏற்படாதபோது பேச்சுக்கான இணக்கம் எப்படி ஏற்படும்...?" வினாவுகின்றார் கலாநிதி அன்ரன் பாலசிங்கம்.

3

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**



## பொய்யான அறிக்கையல்ல, மெய்யான செயற்பாடே தேவை

நோர்வேயின் சமாதான முயற்சிகளுக்கு குந்தகம் விளைவிக்கும் காரியங்களை திட்டமிட்டு நடாத்திவரும் சிறீலங்கா அரசு, மறுபுறத்தே சமாதானம் நெருங்கிவருவதாக பிரச்சாரப்படுத்துவதில் அதிக அக்கறையும் தீவிரமும் காட்டி வருகின்றது.

ஒன்றுக்கொன்று ஒத்துவராத இவ்விரு முரண்பட்ட நகர்வுகளையும் சந்திரிகா அரசு தனது அடக்குமுறைக் கொள்கைக்கு வலுச் சேர்க்கும் நோக்குடன் மேற்கொண்டுவருகின்றது.

விடுதலைப் புலிகள் நான்கு மாதகாலமாக மேற்கொண்ட ஒருதலைப்பட்சமான போர்நிறுத்தத்தை நிராகரித்து, எள்ளிநகையாடி, விடுதலைப் புலிகள் தமது போர்நிறுத்த நடவடிக்கையை நிறுத்திக்கொள்ள முழுக்காரணமாக இருந்த சிறீலங்கா அரசு, ஆனையிறவைக் கைப்பற்றும் நோக்குடன் அக்னி கீல இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டது.

விடுதலைப் புலிகள், சமாதானத்திற்கான நல்லெண்ண சமிக்ஞையை வெளிப்படுத்தியிருந்த காலகட்டத்தில், படைபலத்தைப் பெருக்கி, போர் நடவடிக்கையைத் தீவிரப்படுத்திய சிறீலங்கா அரசு, அதே நேரத்தில், உலக நாடுகளிடம் சென்று விடுதலைப் புலிகளைப் பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலில் இட்டு தடை செய்யுமாறு கோரிக்கைவிடுத்து வந்தது.

சமாதானத்தை விரும்பும் தரப்பு, நிட்சயமாக இத்தகைய சமாதான விரோதக் காரியங்களைப் புரியாது. இரு தரப்பும் நல்லெண்ண நடவடிக்கைகளை மேற்கொண்டு, சமாதானத்திற்கான புறநிலை ஒன்றை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படும் காலத்தில், சிறீலங்கா அரசோ விடுதலைப் புலிகளைத் தடைசெய்ய வைப்பதிலும், போர் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்துவதிலும் அக்கறை காட்டியது.

ஆனையிறவை ஆக்கிரமிக்கும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்ட அக்னி கீல தோல்வியில் முடிவடைந்துள்ளது. வலிந்து படை நடவடிக்கையை மேற்கொண்டு, விடுதலைப் புலிகளின் இராணுவ பலத்தை மெய்ப்பித்த பெருமைய சிறீலங்கா அரசு இதன்மூலம் பெற்றிருக்கின்றது. விடுதலைப் புலிகள் பலவீனமடைந்த நிலையில், போர்நிறுத்தத்தை அறிவிக்கவில்லை என்ற உண்மையை புரியவைப்பதிலும் சந்திரிகா அரசு உதவி புரிந்திருக்கின்றது.

அத்துடன், இராணுவச் சமநிலையில் உயர்ந்த ஸ்தானத்தில் இருந்தபடி விடுதலைப் புலிகள் விடுத்த சமாதான அழைப்பை சகித்துக்கொள்ளாமல், ஆனையிறவை மீளக் கைப்பற்ற சந்திரிகா அரசு மேற்கொண்ட நடவடிக்கை தோல்வியில் முடிவடைந்துள்ளதானது, விடுதலைப் புலிகளின் கையை மேலும் பலப்படுத்திவிட்டிருக்கின்றது என்பது மிகத் தெளிவானது.

சர்வதேச ஊடகங்களில் மாத்திரமன்றி, சிங்களப் பேரினவாத ஊடகங்களிலும் இக் கருத்துக்கள் வெளிப்பட்டு நிற்கின்றன.

விடுதலைப் புலிகளின் போர்நிறுத்தத்தை நிராகரித்து, இராணுவப் பாதையில் சென்று, பலநூறு உயிர்கள் பலியாவதற்குக் காரணமாகிவிட்டது சிறீலங்கா அரசு என்ற கருத்து, மேற்குலக இராஜதந்திர வட்டாரங்களில் நிலவிவருகின்றது. இதனால் நோர்வேயின் சமாதான முயற்சிக்கு பின்னடைவு ஏற்பட்டுள்ளதாகக் கருதும் மேற்குலக நாடுகள், இதற்கு சிறீலங்கா அரசே பொறுப்பேற்கவேண்டும் என்ற கருத்திலும் ஒத்திருக்கின்றன.

இந்தச் சூழ்நிலையில், சமாதானப் பேச்சு வார்த்தைக்கு முன்னராக போர்நிறுத்தம் அவசியம் என்ற விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு வலுவடைந்துவருகின்றது.

சிறீலங்காப் படையினரைப் பொறுத்தவரை தற்போது, நிலைமை தலைகீழானது. படை நடத்தும் வல்லமையை இழந்து, தற்காப்புச் சமரை எப்படி மேற்கொள்வது என்ற தவிப்பில் சிங்களப்படையினர் குழம்பிப் போயிருக்கின்றனர். அத்துடன் சர்வதேச அழுத்தங்களும், உள்நாட்டுச் சிக்கல்களும் சந்திரிகா அரசை நெருக்கிவருகின்றன.

இந்நிலையில், போர்நிறுத்தம் ஒன்றின் தேவையை, சிறீலங்காப் படைத்தலைமையும் அரசும் உணரக்கூடும்.

அப்படியிருந்தபோதும், சமாதான முயற்சியின் திசையில், காத்திரமான எந்த நகர்வையும் மேற்கொள்ளாத, மேற்கொள்ளத் தயங்கும் சந்திரிகா அரசு, சமாதானப் பேச்சுவார்த்தை மற்றும் போர்நிறுத்தம் குறித்த அறிக்கைகளை அடிக்கடி வெளியிட்டுவருகின்றது.

கடந்த பத்தாம் திகதி, சிறீலங்கா வெளிவிவகார அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட அறிக்கை, இராஜதந்திர வட்டாரங்களில் பெரும் நகைப்பிற்கிடமான விடயமாகிவிட்டது. விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையே பல விடயங்களில் இணக்கம் ஏற்பட்டுவிட்டதாக, சிறீலங்கா வெளிவிவகார அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையை விடுதலைப் புலிகள் உடனடியாகவே மறுத்திருந்தனர். நோர்வேயின் சிறப்புத் தூதுவரும் அதனை மறுத்திருந்தார்.

கடனுதவி வழங்கும் நாடுகளை ஏமாற்றும் நோக்கத்துடனும், ஆட்சிக்கவிழ்ப்பு முயற்சியில் ஈடுபட்டிருக்கும் எதிர்க்கட்சிக்கு தமிழ்க்கட்சிகளின் ஆதரவு கிடைக்காமல் செய்துவிடும் நோக்கத்துடனும் இந்தப் பொய் மூட்டையை, சிறீலங்கா வெளிவிவகார அமைச்சு அவசரமாக அவிழ்த்துவிட்டிருந்தது.

விடுதலைப் புலிகளினதும், நோர்வேயினதும் உடனடி மறுப்பு, சிறீலங்கா அரசுக்கு பெரும் தர்மசங்கடத்தை ஏற்படுத்திவிட்டதுடன், அதன் பொய்மையை அம்பலப்படுத்தியுமுள்ளது.

இராணுவத் தளத்தில்தான் சிறீலங்கா அரசு படுதோல்வியடைந்திருக்கின்றது என்பதல்ல, அரசியல் இராஜதந்திரத் தளங்களிலும் சிறீலங்கா அரசு தோற்றுப்போயிருக்கின்றது.

இணக்கப்பாடு காணப்பட்டுவிட்டதாக பொய்யான அறிக்கை விடுவதால் இணக்கப்பாடு ஏற்பட்டுவிடப்போவதில்லை. அதேவேளை, இத்தகைய போலித்தனமான பொய்மைப் பித்தலாட்டங்களால், யாரையும் தொடர்ந்து ஏமாற்றிவிடவும் முடியாது. உண்மையான இணக்கப்பாடும் சமாதானமும் காணப்படவேண்டுமானால், பொய்யான அறிக்கைகள் விடுவதை விட்டுவிட்டு, மெய்யாகவே காரியத்தில் இறங்க வேண்டும். இருதரப்பு அதிகாரபூர்வ போர்நிறுத்தத்திற்குச் சம்மதித்து, புரிந்துணர்வு உடன்பாட்டை ஏற்றுக்கொள்ள சிறீலங்கா அரசு முன்வருமா என்பது அடுத்த வாரங்களில் தெரிந்துவிடும். ■

## "தயவு செய்து வன்முறையை எமது குழந்தைகளிடத்தில் தூண்டாதீர்கள்"

சி[illegible] 11.05.2001 [illegible]

[illegible]

[illegible]

[illegible] ■



# புரிந்துணர்வு உடன்பாட்டு விவகாரத்திலேயே இன்னும் இணக்கம் ஏற்படாதபோது பேச்சுக்கான இணக்கம் எப்படி ஏற்படும்?

## வினாவுகின்றார் கலாநிதி அன்ரன் பாலசிங்கம்

சிறீலங்கா வெளிவிவகார அமைச்சகத்தால், கடந்த பத்தாம் திகதி, அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது. விடுதலைப் புலிகளையும், சமாதான முயற்சியை மேற்கொண்டிருக்கும் நோர்வே அரசையும் சற்று அதிர்ச்சியூட்டும் வகையில் சிறீலங்கா வெளிவிவகார அமைச்சகத்தின் அவ்வறிக்கை அமைந்திருந்தது. விடுதலைப் புலிகளுக்கும் அரசிற்கும் பலவிடயங்களில் இணக்கப்பாடு காணப்பட்டுவிட்டது என்பதே அவ்வறிக்கையின் சாரம். அதன்படி விடுதலைப் புலிகளுக்கும் சிறீலங்கா அரசுக்கும் மத்தியில் இன்றோ நாளையோ நேரடிப்பேச்சுக்கள் ஆரம்பித்துவிடும் என்ற பொய்மையான நம்பிக்கையை, அவ்வறிக்கையை பார்ப்பவர்களிடத்தே அது ஏற்படுத்திவிடும் தன்மையைக் கொண்டிருந்தது.

சிறீலங்கா வெளிவிவகார அமைச்சகத்தின் அவ்வறிக்கை ஊடகங்களில் வெளிவந்த அன்றே, விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் அதனை மறுத்து, யாழ் உதயன் பத்திரிகையில் செவ்வி வழங்கியிருந்தார். அவர் வழங்கிய செவ்வியின் முக்கிய பகுதிகள் வருமாறு.

### கதிர்காமரின் பொறுப்பற்ற பொய்யான தகவல்

'சிறீலங்கா அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகள் அமைப்பிற்கும் இடையே நேரடிப் பேச்சுக்கள் ஆரம்பிப்பதற்கான இணக்கப்பாடுகள் ஏதும் எட்டப்படவில்லை. இருதரப்பினரும் கூடியவிரைவில் பொது இணக்கப்பாட்டை அறிவிக்கும் சாத்தியக்கூறுகள் இருப்பதாகவும், பேச்சு நடத்துவதற்கான சூழ்நிலை தற்போது உருவாகியுள்ளதாகவும் அமைச்சர் கதிர்காமர் கூறியிருப்பாரேயானால் அது முற்றிலும் தவறானது'

### போர்நிறுத்தத்திற்கு இணங்கவேண்டிய நிலையில் அரசு

'யாழ் குடாநாட்டில், அக்னி கீல இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டு அவமானகரமான தோல்வியைச் சந்தித்திருக்கின்றது சிறீலங்காப் படை. இச் சமரில் தமக்கு ஏற்பட்டுள்ள பேரிழப்புகள் காரணமாகவும், புலிகளின் பெரிய தாக்குதல்களைச் சமாளிக்க முடியாத, வலுவில்லாத நிலையில் படையினர் இருக்கின்ற காரணமாகவும், புலிகளுடன் நேரடியாகப் பேசி சமாதானத் தீர்வை எட்டவேண்டும் என்ற சர்வதேச நெருக்குதல் காரணமாகவும், போர்நிறுத்தத்திற்கு இணங்க வேண்டிய கட்டாயத்திற்கு அரசு தள்ளப்பட்டுள்ளது.

போர்நிறுத்தத்திற்கான தனது இணக்கத்தை சந்திரிகா அம்மையார் திரு. சுல்கைம் மூலம் எமக்குத் தெரியப்படுத்தியுள்ளார். எனவே இரண்டு தரப்பிலும் போர்நிறுத்தத்திற்கான ஆர்வம் ஏற்பட்டிருப்பது உண்மைதான். ஆனால் அது தொடர்பான உடன்பாடு ஏதும் ஏற்படவில்லை'

### துப்பாக்கிகளைக் கீழே வைப்பது மாத்திரம் போர்நிறுத்தமல்ல

'போர்நிறுத்தம் என்பது எல்லையில் இருக்கும் புலிப்படை அணிகளும் அரச படைகளும் துப்பாக்கிகளை கீழே வைப்பது மட்டுமல்ல. போர்நிறுத்த காலத்தில், ஏற்கெனவே தான் ஆக்கிரமித்த பிரதேசத்தில் உள்ள எமது தாயக மக்களைக் கைதுசெய்தல், சித்திரவதை செய்தல், பெண்களை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தல் போன்ற கொடுமைகளை அரச படைகள் செய்யாமல் இருக்கவேண்டும்.

இவைபற்றி எல்லாம் விரிவாகப் பேசி, உடன்பாடு காணாமல் போர்நிறுத்த இணக்கப்பாடு வந்துவிட்டதாகக் கூறிவிட முடியாது'

### புரிந்துணர்வு உடன்பாட்டில்க்கூட உடன்பாடு இல்லை

'புரிந்துணர்வுப் பிரகடனத்தின் பெயரிலும், உள்ளீட்டிலும் மாற்றங்களைச் செய்ய சிறீலங்கா அரசு முயல்கின்றது. இந்தப் பெயரையே மனிதாபிமான விவகாரங்கள் சம்பந்தமான உடன்பாடு என்று மாற்ற அரசு முயல்கின்றது. நாம் அதை மாற்றத் தயாராக இல்லை. பேரில்க்கூட இன்னமும் இணக்கம் வரவில்லை. அந்தப் பிரகடனத்தில் இன்னும் சில முக்கிய பிரச்சினைகள் பேசித் தீர்க்கப்பட வேண்டியுள்ளன.

எமது மக்கள் மீதான சகல பொருளாதாரத் தடைகளும் நீக்கப்படுவதாக அமையவேண்டும். ஆனால், பெற்றோல், மசல், சீமெந்து, உருக்குக்கம்பிகள் ஆகியவை சம்பந்தமாக கடுமையான கட்டுப்பாடுகளை அரசு போடுகின்றது. ஒரு சிறிய வீட்டை கிணறு, மலசலகூடம் போன்றவற்றுடன் கட்டுவதானால்க்கூட ஆகக்குறைந்தது நூறு பக்கற் சீமெந்து தேவை. ஆனால் ஒரு வீட்டுக்கு இருபத்தைந்து பக்கற் சீமெந்து தரலாம் என்கிறது அரசு. அத்தோடு வன்னியில் எமது மக்களின் வீடு வாசல்கள், கோவில்கள், கட்டிடங்கள் எல்லாம் குண்டு வீசி அழிக்கப்பட்டுள்ளன.

இவை மீள அமைப்பதற்கு அதிகளவு மூலப்பொருட்கள் தேவை. ஆனால் வன்னிக்கு மாதம் ஐயாயிரம் சீமெந்து பைகள் மாத்திரமே அனுமதிக்கப்பட முடியும் என்கிறது அரசு.

இந்நிலையில், புரிந்துணர்வு உடன்பாட்டு விவகாரத்திலேயே இன்னும் இணக்கம் ஏற்படாதபோது பேச்சுக்கான இணக்கம் எப்படி ஏற்படும்?'

### தடைநீக்காவிட்டால் பேச்சுக்கே இடமில்லை

'எம்மீதான தடை நீக்கப்படாமல் நாம் ஒருபோதும் பேச்சு மேசைக்குப் போகப் போவதில்லை. எம்மீது இலங்கையில் தடைவிதித்து, பிற நாடுகள் சிலவற்றிலும் தடைவிதிப்பதற்கு சூத்திரதாரியாக இருந்த அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர், இதனைப் புறந்தள்ளிவிட்டு இணக்கம் வந்துவிட்டது என்கிறார்.

தடைவிவகாரத்தால் பேச்சுக்கு தடை ஏற்பட்டால் அதன் சூத்திரதாரியான தன்மீதுதான் பழிவிழும் என்பதால் தடை விவகாரத்தைப் புறந்தள்ளி ஏதோ எல்லா விவகாரங்களிலும் இணக்கம் வந்துவிட்டதுபோலவும், இப்போது தடை விவகாரத்தைப் புலிகள் புதிதாக முன்வைத்து ஏற்கெனவே ஏற்பட்ட இணக்க நிலையைக் குழப்புகின்றார்கள் என்பது போலவும் காட்டித் தம்பட்டமிடுகின்றார் அவர்'

### ஏமாற்றுத் தந்திரம்

'புலிகளுடன் பேச்சு நடத்தித் தீர்வு காண்பதற்கு ஆக்கபூர்வமான, உருப்படியான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற சர்வதேச நெருக்கடிகள் அரசின்மீது அதிகரித்து வருகின்றது. அப்படிச் செய்யாவிட்டால் தாங்கள் வாக்குறுதி அளித்த கடன் உதவிகளை வழங்க முடியாது என ஐரோப்பிய நாடுகள் பலவும் சிறீலங்கா அரசிடம் திட்டவட்டமாக தெரிவித்துவிட்டன.

இந்த நெருக்கடிகளில் இருந்து தப்புவதற்காகவும், உள்நாட்டில் கிளர்ந்தெழுந்து வரும் பிரச்சினைகள், நெருக்கடிகளிலிருந்து மக்களின் கவனத்தைத் திசை திருப்புவதற்காகவும் புலிகளுடன் பேச்சுக்கான இணக்கம் வந்துவிட்டது என்ற புதிய கதையை அவசரப்பட்டு முன்வைக்கிறது அரசுத்தரப்பு.

அத்தகைய உடன்பாடு ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுவது எமக்கு ஆச்சரியத்தைத் தருகின்றது' ■



# இரண்டு கண்களும் காக்கும் கரங்களும்

பௌத்த சிங்களப் பேரினவாதத் திற்குத் தலைமையேற்றிருக்கும் சந்திரிகா அரசிற்கு இரண்டு பிரதான பொறுப்புக்கள் இருக்கின்றன. ஒன்று சிங்கள இராணுவ அடக்குமுறை இயந்திரத்தை வலுவூட்டிப் பலப்படுத்துவது. மற்றையது பௌத்த மதத்தை போசித்துப் பாதுகாப்பது.

இவ்விரண்டு பணிகளையும் சந்திரிகா அரசு செவ்வனே செய்கின்றது. தமிழ்த் தேசிய இனத்தை அடக்கி ஆள்வதற்கு ஏதுவாக, சிங்களப்படையை நவீனமயப்படுத்தி, அதன் படைபலத்தைப் பெருக்கிவருகின்றது. முப்படைகளையும் பலப்படுத்துவதே நாட்டின் அதிமுக்கிய பணியாக சந்திரிகா அரசு கருதிச் செயற்படுகின்றது. அதேபோன்று, இலங்கைத்தீவில் பௌத்த மதமே முதன்மையானதும், முன்னுரிமைக்கும் உரியது என்ற வகையில் சிங்கள அரசுகள் செயற்பட்டு வந்திருக்கின்றன. அதன் தொடர்ச்சியாக சந்திரிகா அரசு, இன்னும் சற்று தீவிரத்துடன் பௌத்த மதத்தை போசித்துவருகின்றது.

பழுத்த இனவாதியான சிறீலங்காவின் தற்போதைய பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்காவிடம் அந்தப் பணிகளை ஒப்படைத்துவிட்டு, சிறீலங்கா சனாதிபதி சந்திரிகாவோ, சமத்துவம், சகோதரத்துவம் குறித்தும் சமாதானம் குறித்தும் புதிய பாத்திரத்தில் நடித்துவருகின்றார்.

இவ்வாண்டின் தை மாதம், இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பதற்காக, ரட்ணசிறி விக்கிரமநாயக்கா களத்தில் இறங்கினார். கதிர்காமத்தில், பதினையாயிரம் படையினருக்கு ஆட்சேர்க்கும் வைபவத்தை ஆரம்பித்துவைத்த விக்கிரமநாயக்கா, சம்பளம் சலுகைகளை எதிர்பார்க்காமல், நாட்டைக் காக்க இளைஞர்கள் இராணுவத்தில் சேர்ந்துகொள்ள வேண்டும் என அழைப்பு விடுத்தார். இராணுவத்திற்கு ஆட்களைச் சேர்க்க ஊரூராய்ச் சென்று பிரச்சாரம் நடத்தினார் சிறீலங்காவின் பிரதமர்.

தற்போது அவர் வேறு பணியில் ஈடுபட்டிருக்கின்றார். இராணுவ ஆட்சேர்ப்பை முடித்துக்கொண்டு, தற்போது புத்தபிக்குகளுக்கு ஆட்களைச் சேர்க்கும் பணியில் தீவிரமாய் ஈடுபட்டிருக்கின்றார். பௌத்த மதத்திற்கு எதிராக சதி நடப்பதாகவும், பௌத்த மதத்தைக் காப்பாற்ற இளைஞர்கள் முன்வரவேண்டும் எனவும் அழைப்புவிடுத்திருக்கின்றார் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா. இரண்டாயிரம் பேரை திரட்டுவது திட்டம். அடுத்த மாதம் பொசனையிட்டு ஆயிரம் இளைஞர்களையாவது காவியுடையை உடுக்கவைத்துவிட வேண்டும் என்பது அவரது திட்டம். மதத்துறவிகளுக்காக இளைஞர்களைக் கவர்ந்திழுக்க, வண்ண வண்ண சுவரொட்டிகள் அச்சடித்து ஒட்டப்பட்டுள்ளன. பௌத்த பிக்குகளுக்கு ஆட்கள் போதாமையால் வடமேற்கு மாகாணத்தில் பல புத்தவிகாரைகள் பூட்டப்பட்டுக் கிடப்பதாகவும் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா வருந்துகின்றார். ■